# தண்டனை

ஜொகூர், சா ஆ தர்மா மண்டபத்தில்
துறவி அவர்கள் ஆற்றிய
உரையின் தொகுப்பு

# தண்டனை

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | **பக்கம்** |
| 1. | அறநீதியும் தண்டனையும் | 5 |
| 2. | கோசல நாட்டு மன்னன் அச்சத்தில் நடுங்கிய கதை | 13 |
| 3. | இவ்வுலகத் தண்டனையிலிருந்துதப்பித்துக்கொண்டோருக்கு, அடுத்த உலகில் தண்டனை உண்டு | 18 |
| 4. | அடுத்த உலகத் தண்டனை | |
| | 4.1 பேய்ப் பிறப்பு | 26 |
| | 4.2 மிருகப் பிறப்பு | 34 |
| | 4.3 நரகப் பிறப்பு | 39 |
| | 4.4 மனிதப் பிறப்பு | 47 |
| 5. | தவறான வழியில் திரும்பிய மனம் அதிகக் கேடு விளைவிக்கும் | 50 |

# தண்டனை

## 1. அறநீதியும் தண்டனையும்

எந்த ஒரு செயல் , செய்த பின், அதை நினைத்து மனம் வருந்துமோ; எதன் பிற்பயனை அழுது கொண்டே அனுபவிக்க வேண்டியிருக்குமோ, அது நற்செயல் ஆகாது.

எவ்வகையான செயல் அதைச் செய்த பின், அதை நினைத்து மனம் வருந்தும்? பாவச் செயல், அதைச் செய்த பின் , அதை நினைத்து மனம் வருந்தும். எவ்வகையான செயலின் பயனை அழுது கொண்டே அனுபவிக்க வேண்டியிருக்கும்? பாவச் செயலின் பயனை அழுதுகொண்டே அனுபவிக்க வேண்டியிருக்கும்.

பாவ கருமங்களைச் செய்தோர், பாவம் பழுக்கும்போது, அதன்பிடியிலிருந்து தப்ப முடியாமல், "பாவம் செய்தேனே!" என மனம் வருந்தி, அதன் பயனை அழுதுகொண்டே அனுபவிப்பார்கள்.

பாவம் என்றால் என்ன? பாவம் என்பது, தன் சுகத்தை நாடி, தன்னைப் போல் சுகத்தை நாடும் பிறருக்குத் தீங்கு செய்தலாகும்.

"தன் சுகத்தை நாடி, தன்னைப்போல் சுகத்தை நாடும் பிறருக்குத் தீமை செய்தல்" என்பதன் பொருள் என்ன?

பிறர் நமக்குத் தீங்கு செய்தால், அது நமக்கு வேதனையைத்தரும்; துயரத்தைத் தரும்; துன்பத்தைத் தரும். அதுபோல் நாம் பிறருக்குத் தீங்கு செய்தோமென்றால், அது பிறருக்கும் வேதனையைத் தரும்; துயரத்தைத் தரும்; துன்பத்தைத் தரும்.

தீயவை நமக்குத் துன்பத்தைத் தருவதுபோல், பிறருக்கும் அது துன்பத்தைத் தரும் என்பதை மறந்து, நாம் ஒரு இலாபத்தை நாடி, பிறருக்குத் தீங்கு செய்தோமென்றால், நாம் பாவம் செய்தவர்களாகிறோம்.

தன் சுகத்தை நாடி, பாவம் செய்பவனுக்கு, அப்போது ஒரு சுகம் கிடைத்த போதிலும், அது பிறருக்குத் துன்பத்தைத் தரும்; பின்னால் இவனுக்கும் துன்பத்தையே தரும்.

உதாரணத்திற்கு நெறி தவறி காம இன்பத்தை நாடுபவனை எடுத்துக் கொள்வோம். பிறர் மனைவியோடு விபச்சாரம் செய்பவனுக்கு, அப்போது ஒரு சுகம் கிடைத்த போதிலும், அது அந்தக் கணவனுக்கு வேதனையைத் தரும். பின்னால் இவனுக்கும் வேதனையையே தரும். பகை, பழி, பாவம், அச்சம், தண்டனை யாவும் இவனை வருத்தும்.

தன் சுகத்தை நாடி, பிறருக்குத் தீங்கு செய்வோருக்கு, அப்போது ஒரு சுகம் கிடைத்த போதிலும், பின்னால் இவர்களைத் துன்பம் பற்றிக் கொள்வதையும்; அப்போது இவர்கள் அதன் பிடியிலிருந்து தப்புவதற்கு என்னதான் முயன்றாலும், தப்ப முடியாமல் பரிதவிப்பதையும் இவ்வுலகில் பரவலாகக் காணலாம்.

இதையே பகவான் புத்தர் இவ்வாறு விளக்கியுள்ளார்:

> ***இரகசியமாகவோ, பலர் அறியவோ, இப்போது நீ தீய செயலைச் செய்தாய் என்றால், பின்னால் அதனிடமிருந்து தப்ப முயன்றாலும், நிச்சயமாக நீ துன்பப்படுவாய்,***

ஆகவே, இப்போது நாம் பிறருக்குத் தீமை செய்தோம் என்றால், பின்னால் நாமும் அதனால் துன்பப்படுவோம்.

திருவள்ளுவரும் இதையே இவ்வாறு கூறியுள்ளார்:

> ***"நோய் எல்லாம் நோய் செய்தார் மேலவாம்"***

அதாவது, துன்பம் யாவும் துன்பம் செய்தோரையே நாடும்.

இது அறநீதி. அற நீதியை இறைத் தண்டனை என்றும்;வினைப்பயன் என்றும் சான்றோர் கூறுவதுண்டு. அநீதியின் செயல் முறையிலிருந்து எவருமே தப்ப முடியாது. ஏன்? அறநீதி ஒருபோதும் தவறுவதில்லை.

ஆகவே, தம் சுகத்தை நாடி, தம்மைப்போல் சுகத்தை நாடும் பிற உயிர்களுக்குத் தீங்கு செய்வோரை அற நீதி தண்டிக்கும். அதாவது, அறமில்லாச் செயல்களைச் செய்தோரை அறநீதி தண்டிக்கும். அறநீதி ஒருபோதும் தவறுவதில்லையாதலால், அறநீதியின் தண்டனையிலிருந்து, எவரும் தப்ப முடியாது.

எங்கு, எப்படி, எப்போது அறநீதி தண்டிக்கும் என்பதை நாம் நம் சிந்தனையால் அறிய முடியாது. அது நம் அறிவிற்குப் புரியாத ஒரு மர்மம். சிலர் உடனே தண்டிக்கப்படுவர்; சிலர் சில காலம் கழித்துத் தண்டிக்கப்படுவர்; சிலர் அடுத்த உலகில் (எதிர்காலப் பிறப்புகளில்) தண்டிக்கப்படுவர்.

முற்பிறப்புகளில் செய்த பாவங்களுக்குச் சிலரை , அறநீதி தற்போதைய வாழ்வில் தண்டிக்கும்; தற்போதைய வாழ்வில் செய்த பாவங்களுக்குச் சிலரைத் தற்போதைய வாழ்விலேயே தண்டிக்கும்; மற்றும் சிலரை, தற்போதைய வாழ்வில் செய்த பாவங்களுக்குத் தற்போதைய வாழ்விலேயே தண்டிக்காமல், அடுத்த உலகில் தண்டிக்கும்.

எவ்விதத்திலும் அறநீதி தன் நீதியில் தவறுவதேயில்லை. அறநிதி தன் நீதியில் தவறுவதில்லை என்பதால், சிலரைத் தாயின் கருப்பையில் தண்டிக்கும்; சிலரைப் பிறந்தவுடன் தண்டிக்கும்; சிலரைக் குழந்தைப் பருவத்தில் தண்டிக்கும்; சிலரை வாலிபப் பருவத்தில் தண்டிக்கும்; சிலரை முதுமையும், தளர்ச்சியும் வந்த காலத்தில் தண்டிக்கும்; சிலரை மரண வாயிலில் தண்டிக்கும்; சிலரை அடுத்த உலகில் தண்டிக்கும்.

அறநீதியின் செயல் முறையில் பாகுபாடு இல்லை. அறநீதி பாரபட்சமற்றது:

ஆண், பெண்; இளைஞர், முதியோர்; இல்லறத்தினர்,

துறவறத்தினர் என அறநீதி பாகுபாடு பார்ப்பதில்லை.

கோழை, தைரியசாலி; எளியவர், வலியவர்; அழகுடையோர், அழகற்றோர் என அறநீதி பாகுபாடு பார்ப்பதில்லை.

ஏழை, செல்வந்தன்; ஆண்டான், அடிமை; குரு, சிஷ்யன் அறநீதி பாகுபாடு பார்ப்பதில்லை.

கற்றோர், கல்லார்; அறிவுடையோர், அறிவிலார்; புத்திசாலி, புத்தியில்லாதவர் என அறநீதி பாகுபாடு பார்ப்பதில்லை.

நல்லோர், தீயோர்; நம்பினோர், நம்பாதோர்; ஆஸ்திகர், நாஸ்திகர்; பக்தியுள்ளோர், பக்தியற்றோர் என அறநீதி பாகுபாடு பார்ப்பதில்லை.

எந்தக் குடும்பம்; எந்த இனம்; எந்த மதம் என அறநீதி பாகுபாடு பார்ப்பதில்லை.

அறத்தைப் பழித்தோர் எவராயினும், அறநீதி பாரபட்சம் பாராமல் தண்டிக்கும். இங்கும் தண்டிக்கும்; அடுத்த உலகிலும் தண்டிக்கும்.

அறத்தைப் புகழ்ந்தோர் எவராயினும், அறநீதி பாரபட்சம் பாராமல் சுகமளிக்கும். இங்கும் சுகமளிக்கும்; அடுத்த உலகிலும் சுகமளிக்கும்.

பாவம் செய்தவனும் வருந்தி, கண்ணீர் சிந்தி, மன்னிப்புக் கோரி, இனிமேலும் பாவங்கள் செய்வதில்லை என உறுதி பூண்டு, பாவச் செயல்களை முழுமையாக விலக்கி, நற்கருமங்கள் செய்து, நல்வழியில் நடந்தானென்றால், அறநீதி அவனையும், இருளிலிருந்து வெளிச்சத்திற்கு அழைத்துச் செல்லும். அடுத்த உலகில் தெய்வலோக சுகத்திற்கு உயர்த்தும்.

நல்லவனும் அறத்தை மறந்து, பாவங்கள் செய்தானென்றால், அறநீதி அவனையும் வெளிச்சத்திலிருந்து இருளுக்குள் தள்ளும், அடுத்த உலகில் நரகத்தின் தீய்க்குள் தள்ளும்.

அறநீதி எவ்வாறு செயல்படுகிறது என்பது மர்மம். அது அறிவுக்கும், சிந்தனைக்கும் புரியாத மர்மமாகவே இருக்கின்றது.

மாளிகையில் வாழும் ஒரு குபேரன் ஓட்டாண்டி ஆவதையும்; குடிசையில் வாழும் பரம ஏழை குபேரனாவதையும்; வருந்தி, வருந்தி உழைத்தும் சிலர் வறுமையில் வாடுவதையும்; ஒன்றன் பின் ஒன்றாகத் துன்பங்கள் சிலரை வருத்துவதையும்; "தொட்டதெல்லாம் பொன்னாவதுபோல்" சிலருக்கு நன்மைகள் ஏற்படுவதையும் நாம் இவ்வுலகில் காண்கிறோம். இவற்றையெல்லாம் காணும் நாம், எதனால் இவை நடைபெறுகின்றன எனக் காரணத்தைத் தேடிய போதிலும், அவை நம் அறிவிற்கும் சிந்தனைக்கும் புரியாத மர்மமாகவே இருக்கின்றன.

குற்றமற்ற நிரபராதிகள் வருத்தித் தண்டிக்கப்படுவதையும்; பாவிகளின் ஆதிக்கத்தில் நல்லோர் கண்ணீர் சிந்தி துன்பமடைவதையும்; துரோகிகளின் வஞ்சகத்தால் நல்லோர் நலிவதையும்; பழி பாவங்களுக்கு அஞ்சி பயபக்தியுடன் வாழ்வோரைத் திடீரெனப் பெருந் துன்பங்கள் சூழ்வதையும் நாம் இவ்வுலகில் காண்கிறோம். இவற்றையெல்லாம் காணும் நாம், எதனால் இவை நடைபெறுகின்றன எனக் காரணத்தைத் தேடிய போதிலும், அவை நம் அறிவிற்கும் சிந்தனைக்கும் புரியாத மர்மமாகவே இருக்கின்றன.

அக்ரமம் செய்வோர் மகிழ்ந்திட, நல்லோர் நலிவுற்று வருந்துவதையும் ; சூது வாதற்ற மக்கள் வஞ்சிக்கப் படுவதையும்; கற்புடைய மங்கையற்குத் துஷ்டன் கணவனாக அமைவதையும்; நற்செயல்கள் செய்வோர் நிந்திக்கப்படுவதையும்; செல்வம் மிகுந்த குடும்பங்களில் பாவிகள் பிறந்து சுகபோக வாழ்வு வாழ்வதையும் இவ்வுலகில் நாம் காண்கிறோம். இவற்றையெல்லாம் காணும் நாம், எதனால் இவை நடைபெறுகின்றன எனக் காரணத்தைத் தேடிய போதிலும், அவை நம் அறிவிற்கும் சிந்தனைக்கும் புரியாத மர்மமாகவே இருக்கின்றன.

உள்ளத்தில் இரக்கமில்லாக் கருமிக்குப் பொருள் வந்து சேர்வதையும், பொய்யும், களவும், சூதும், கபடமும், வஞ்சனையும் செய்வோர் பெருவாழ்வு வாழ்வதையும்; சூழ்ச்சியாலும், வஞ்சகத்தாலும்,

கபடத்தாலும், துரோகத்தாலும் பாவிகள் அதிகாரத்தைக் கைப்பற்றி அக்ரமம் செய்வதையும் ; போரினாலும், புயலினாலும், வெள்ளத்தாலும் அப்பாவி மக்கள் பெருமளவில் மடிவதையும்; இவ்வுலகில் நாம் காண்கிறோம்.
இவற்றையெல்லாம் காணும் நாம் , எதனால் இவை நிகழ்கின்றன எனக் காரணத்தைத் தேடிய போதிலும், அவை யாவும் நம் அறிவிற்கும், சிந்தனைக்கும் புரியாத மர்மமாகவே இருக்கின்றன.

அறநீதி எவ்வாறு செயல்படுகிறது என்பது மர்மமாவே இருந்து வந்த போதிலும், அறிவுக் கண்ணுடன் நோக்கினோமென்றால், அதன் பாரபட்சமற்ற நீதியை உலகெங்கும் காணலாம்.

அறநீதி நல்லோரின் பொறுமையைச் சோதிப்பது போல் தோன்றினாலும், தீய கருமங்களைச் செய்தோரை பொறுத்திருந்து அழிப்பதை உலகெங்கும் பரவலாகக் காணலாம்.

"பாவம் என்னை அண்டாது" என அகந்தையில் தீயனவற்றைச் செய்தோர், பாவம் பழுத்துத் தன் துன்பப் பலனத் தரும்போது, அழுது புலம்புவதை உலகெங்கும் காணலாம். இவற்றைக் காணும் அறிவுடையோர், அறநீதியின் தண்டனையிலிருந்து எவரும் தப்ப முடியாது என்பதை உணர்ந்து, பாவங்களுக்கு அஞ்சி வாழ்வர். அறநீதியின் தண்டனையைப் பார்த்தும் பாவத்தில் மகிழ்வோர் அறிவிலார்.

வாலிபச் செருக்கில், நல்லோரையும், நல்லோரின் அறிவுரைகளையும் அலட்சியப்படுத்தி உதாசீனம் செய்தோர், முதுமை வந்த காலத்தில், தாம் இளமையில் செய்த குற்றங்களை எண்ணி எண்ணிப் பரிதவிப்பதுவும் அறவிதியின் தவறாத நீதிதான் என்பதை அறிவுடையோர் அறிவர்.

அறவிதிகளையும், அடுத்த உலகையும் பரிகசித்தோர், மரண வாயிலில் அஞ்சி நடுங்குவதும் அறநீதியின் செயலே!

அக்ரமம் செய்தோர், நீதிக்கும், தண்டனைக்கும் அஞ்சி ஓடுவதும் அற நீதியின் செயலே!

பொறாமைக்காரன், பேராசைக்காரன், நன்றி மறந்து கேடு

செய்பவன், பிறரை ஏவி விடுபவன் இவர்கள் யாவரும் கெட்டழிவதும் அறநீதியின் செயலே!

வம்பு வளர்ப்பவன்; பிடிவாதக்காரன்; புறம் பேசித் திரிபவன்; பிறரைத் தூண்டிவிடுபவன் இவர்கள் எல்லாம் புகழ் இல்லாது வாழ்வதும் அறநீதியின் செயலே!

உண்மையில்லாதவற்றைப் புனைந்துரைப்பவன்; பொய்ச் சாட்சி சொல்பவன்; நம்பிக்கைத் துரோகம் செய்பவன்; பித்தலாட்டக்காரன் இவர்களெல்லாம் நீதிக்கு அஞ்சி நடுங்குவதும் அற நீதியின் செயலே!

உள்ளத்தில் வெறுப்புடையோன்; உள்ளத்தில் அன்பில்லாதவன்; வேடதாரி, கருமி இவர்களெல்லாம் அஞ்சி அஞ்சி வாழ்வதும் அறநீதியின் செயலே!

வெட்கமில்லாதவன் ; பாவம் செய்ய அஞ்சாதவன்; கொடுமைக்காரன்; வன் செயல்களைச் செய்பவன்; எளியோரை வருத்துபவன்; இவர்களெல்லாம் "அடுத்த உலகில் என் கதி என்னவோ" என மரணத்தை நினைத்து அஞ்சி நடுங்குவதும் அற நீதியின் செயலே!

இவை யாவற்றையும் காணும் அறிவுடையோர், "அறநீதி தவறாது தண்டிக்கும் என அறிந்து, பாவத்திற்கு அஞ்சி வாழ்வார்கள். அறிவிலாரோ, அறநீதியின் தண்டனையைப் பார்த்தும் பாவச் செயல்களைச் செய்வதற்கு அஞ்சுவதில்லை.

அறநீதி இப்படியும் தன் நீதியை உலகிற்குக் கற்பிக்கும்:

நான் வல்லவன் என மார் தட்டும் வீரனையும் தலை குனிய வைக்கும்.

இளமையில் செய்த பாவங்களுக்கு முதுமையில் தண்டிக்கும்.

பாவத்தில் மகிழும் மடையனைப் பொறுத்திருந்து அழிக்கும்.

பிறருக்குக் கேடு செய்யத் திட்டமிடுவோனை , அவன் கெடத்

திட்டமிடும்.

வஞ்ச மனத்தானை வஞ்சனையால் அழிக்கும்.

நன்றி மறந்தவனுக்கு, நன்றி கெட்ட மக்களைக் கொடுத்துத் தண்டிக்கும்.

இரகசியமாகப் பாவம் செய்தோரைப் பலர் அறியத் தண்டிக்கும்,

வேடதாரியின் கபடத்தை உலகறியத் திறந்து காட்டும்.

ஒழுக்கமில்லாதோரின் சிறுமையையும், செருக்கையும் பலர் நாவினால் இகழ வைக்கும்.

"நான் ஏழை" எனக் கூறிப் பாவம் செய்பவனை மேலும் ஏழையாக்கும்.

பாவியின் சொத்தை ஒரே தலைமுறையில் அழித்துவிடும்; இல்லையேல், அவன் மக்களிடையே பகையை உண்டு பண்ணி, சொத்தைப் பங்காடி சிதற வைக்கும்.

துரோகியின் குடும்பத்தில் பகையை உண்டு பண்ணி, அவன் மனைவி மக்களே அவனுக்குத் துரோகம் செய்யுமாறு செய்யும்.

வேதனை, நஷ்டம், பொருள் அழிவு, உடலில் சேதம், பெருநோய்கள், சித்தப்பிரமை, பயங்கரமான குற்றச்சாட்டு, பந்துக்களை இழத்தல் இவ்வாறெல்லாம் அறநீதி பாவிகளைத் தண்டித்து உலகிற்குத் தன் நீதியைக் கற்பிக்கும்.

இவ்வாறெல்லாம் அற நீதி, தன் நீதியை உலகிற்குக் கற்பித்துவந்த போதிலும், தினம் தினம் அறநீதியின் தண்டனைகளைப் பார்த்தும், எதனாலோ உலகம் பாவத்தில் மகிழ்கிறது. இதுவும் அறிவிற்கும், சிந்தனைக்கும் எட்டாத மர்மமாகவே இருக்கின்றது. உண்மையில் இதுவே மர்மத்திலும் மர்மம்.

## 2. கோசல நாட்டு மன்னன் அச்சத்தில் நடுங்கிய கதை.

பசிநாதி என்பவர் கோசல நாட்டு மன்னன். ஒரு நாள் மன்னர் யானை மேல் அமர்ந்து, பட்டணத்தை ஊர்வலம் வந்தான். பட்டணத்தின் வீதிகளில் மக்கள் கூடி, மன்னன் ஊர்வலம் வருவைதைக் கண்டு களித்தனர். ஓர் ஏழையின் அழகிய மனைவி தன் வீட்டின் ஜன்னலுக்கருகில் நின்று மன்னன் ஊர்வலம் வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். யானை மீது அமர்ந்து, ஊர்வலம் வந்த மன்னன், ஓர் இல்லத்தின் ஜன்னலுக்கருகில், நின்ற ஏழையின் அழகிய மனைவியைப் பார்த்ததும், அவள் மீது மோகம் கொண்டான்.

ஊர்வலம் முடிந்ததும், மன்னன் நம்பிக்கையுள்ள ஒரு மந்திரியை அழைத்து, வீட்டை அடையாளம் கூறி, அந்த வீட்டிலுள்ள் பெண் திருமணம் செய்தவளா, திருமணம் ஆகாதவளா என்பதைத் தெரிந்து வருமாறு கட்டளையிட்டான். மந்திரியும் விசாரித்து அவள் ஓர் ஏழையின் மனைவி என்பதை அறிந்து, அதை மன்னரிடம் தெரிவித்தான். இதைக் கேட்ட மன்னன் "அப்படியானால், அவள் கணவனை அரண்மனைக்கு ஆஜராகும்படி உத்தரவிடு " எனக்கூறினான்.

மன்னனின் உத்தரவைக் கேள்வியுற்ற ஏழை, தனக்கு ஏதோ ஆபத்து ஏற்படப் போகிறது என உணர்ந்து, அரண்மனைக்குச் சென்று, மன்னனை வணங்கிப் பணிவுடன் நின்றான்.

"நீ இன்றிலிருந்து எனக்குச் சேவை செய்ய வேண்டும்" என்று மன்னன் ஏழையிடம் கூறினான்.

"மன்னா, நான் என் சொந்த வேலையைச் செய்ய அனுமதியுங்கள். தவறாது கப்பம் கட்டிவிடுகிறேன்" என்று ஏழையும் மன்னனிடம் கூறினான்.

"எனக்கு உன் கப்பம் வேண்டாம். இன்றிலிருந்து நீ எனக்குச் சேவை செய்ய வேண்டும்." எனக்கூறி, வாளையும், கேடயத்தையும்

மன்னன் ஏழையிடம் கொடுத்தான்.

மன்னன் தனக்குக் கேடு செய்யத் திட்டமிடுகிறான் என்பதைப் புரிந்துகொண்ட ஏழையும், குற்றம் ஏதும் செய்யாமல் தன் கடமையைக் கவனமுடன் செய்து வந்தான்.

ஏழையின் மனைவி மீது மோகம் கொண்ட மன்னன், ஏழைச் சேவகன் மீது ஏதாவது குற்றம் சாட்டி, அவனைக் கொன்று, அவன் மனைவியை அடையத் திட்டமிட்டான்.,

ஓர் இரவு, " எவ்வாறு இவன் மீது குற்றம் சாட்டி இவனைக் கொல்லலாம்" என பலவாறு எண்ணியவனாய், படுக்கையில் தூக்கமின்றி மன்னன் படுத்திருந்தான். நடுநிசியில், திடீரென்று நான்கு பயங்கரமான ஓசைகளைச் செவியுற்றான். அத்தகைய பயங்கர ஓசைகளை மன்னன் ஒருபோதும் செவியுற்றதில்லை.

அப்பயங்கர ஓசைகளைச் செவியுற்ற மன்னனின் மனத்தை அச்சம் பற்றிக்கொண்டது. உள்ளம் அச்சத்தால் நடுங்கியது. ஏதோ துன்பம் தன்னை அண்டப் போகிறது என்ற அச்சத்தில், நடுங்கிக்கொண்டு, இரவெல்லாம் தூக்கமின்றி, எப்போது பொழுது விடியும் எனக் காத்திருந்தான்.

பொழுது விடிந்ததும், ஆலய மதகுருவை அழைத்து, தான் நடுநிசியில் செவியுற்ற ஓசைகளின் பொருள் என்ன என்றும், ஒருவேளை தன் உயிருக்கு ஆபத்து ஏற்படப் போவதை முன்னதாகவே எச்சரிக்கும் அறிகுறியா என்றும்; அப்படியானால் , அதைத் தவிர்க்கும் மார்க்கம் ஏதேனும் உண்டா என்றும் கேட்டான்.

ஆலய மதகுருவிற்கு, ஓசைகளின் பொருள் விளங்கவில்லை. தன் அறியாமையை ஒத்துக் கொண்டால் செல்வாக்கை இழந்துவிடுவோம் என்று எண்ணி, "மன்னரே, அந்த ஓசைகள் தங்களுக்கு மரணம் சம்பவிக்கப் போகிறது என்பதை எச்சரிக்கும் அறிகுறி"  என்று மதகுரு கூறினார்.

இதைக் கேள்வியுற்றதும் , மன்னனை மேலும் அச்சம்

பற்றிக்கொண்டது. " மரணத்தைத் தடுக்க மார்க்கம் ஏதும் உண்டா" என மன்னன் மதகுருவைக் கேட்டான்.

"உண்டு மன்னரே! எல்லா வகை உயிர்களையும் பலி கொடுத்தால், தாங்கள் மரணத்திலிருந்து மீளலாம்" என்று மதகுரு கூறினார்.

அச்சத்தால் நடுங்கிய மன்னன் "உடனே அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்" என ஆணையிட்டான்.

அரண்மனையில் பெரும் ஆரவாரம். பணியாட்கள் உயிருள்ள ஜீவன்களைத் தேடும் பணியில் இங்குமங்கும் ஓடினார்கள். மனிதர் உட்பட, யானை, குதிரை, மாடு, கழுதை, பன்றி, கோழி, புறா போன்ற உயிர்ப் பிராணிகளைச் சேகரித்தார்கள்.

இத்தகைய ஆரவாரத்தைக் கவனித்த மன்னனின் மனைவி ராணி மல்லிகா, மன்னரிடம் சென்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆரவாரத்திற்கான காரணத்தைக் கேட்டாள்.

"மல்லிகா, என் செவியினுள் விஷநாகம் புகுந்துவிட்டது. " எனக் கூறிய மன்னன், தான் நடு நிசியில் செவியுற்ற ஓசைகளையும், தன் உயிருக்கு ஆபத்து ஏற்படப் போவதையும், அதைத் தவிர்க்க மதகுருவின் ஆலோசனைப்படி, எல்லா வகை உயிரிகளையும் பலி கொடுப்பதற்குச் செய்யப்படும் ஏற்பாடுகளையும் விபரித்தான்.

இதைக் கேட்ட ராணி மல்லிகா, "மன்னரே, ஒரு மனிதனின் இறப்பினால், மற்றொருவன் தப்பித்துக் கொண்டதாக எங்குக் கேள்விப்பட்டீர்கள்! தங்களுக்குச் சிந்தனையில்லையா! ஆலய மதகுரு கூறினார் என்பதற்காக, மக்களை இவ்வாறு வருத்தலாமா! யாவும் அறிந்த பகவான் புத்தர் அருகில் இருக்கின்றாரே, அவரிடம் சென்று கேளுங்கள். அவர் உண்மை எதுவென விளக்குவார்," என்று கூறினாள்.

மன்னனும் , ராணி மல்லிகாவுடன் பகவான் புத்தரைக் காணச் சென்றார் . ராணி மல்லிகா, நடந்த யாவற்றையும் பகவான் புத்தரிடம் விளக்கினாள். "இது உண்மையா," எனப் பகவான் புத்தர் மன்னனிடம்

வினவினார். "ஆம், உண்மைதான் பகவான் " என மன்னர் பதிலுரைத்தார்.

"எவ்வாறான ஓசைகளைச் செவியுற்றீர்கள்" என்று பகவான் புத்தர் வினவினார்.

மன்னன் தான் நடுநிசியில் செவியுற்ற ஓசைகளை விளக்கினான்.

இதைக் கேட்ட பகவான் புத்தர், சிறிது நேரம் அமைதியாக இருந்துவிட்டு, பின் கூறினார், “மன்னரே, தாங்கள் செவியுற்ற ஓசைகள் நரகத்தில் வேதனைப்படும் நால்வர் எழுப்பிய அவலக்குரல்" என விளக்கினார். (இது நம் அறிவிற்கு விளங்காத போதிலும், இதுபோன்ற சம்பவங்கள் நடப்பதுண்டு.)

"எதனால் அவர்கள் நரகத்தில் துன்பப்படுகிறார்கள்," என மன்னன் பகவான் புத்தரிடம் கேட்டார்.

அந்த நான்கு பேரும் எதனால் நரகத்தில் துன்பப்படுகிறார்கள் என்பதை விளக்கும் பொருட்டு, அந்த நால்வரின் முற்பிறப்புக் கதைகளை பகவான் புத்தர் மன்னனுக்கு விளக்கினார்.

முற்பிறப்பில், இந்த நால்வரும் செல்வம் மிகுந்த குடும்பங்களில் பிறந்தார்கள். இந்த நால்வரும் நெருங்கிய நண்பர்கள்.

செல்வம் மிகுந்த குடும்பங்களில் பிறந்த இந்த நால்வருக்கும் அறத்திலும், நன்னெறி ஒழுக்க நெறிகளிலும், நாட்டம் இருந்ததில்லை. நற்செயல்கள் செய்வதிலும், தான தர்மங்கள் செய்வதிலும் இவர்களுக்கு விருப்பம் இருந்ததில்லை. தர்ம உபதேசங்களையும், அடுத்த உலகையும் பரிகசித்து, அலட்சியப் படுத்தினார்கள்.

செல்வச் செருக்கில், பாவத்திற்கு அஞ்சாது, இன்பங்களைத் தேடிக் களிப்புற்றார்கள். மாற்றான் மனைவியுடன் விபச்சாரம் செய்தார்கள். வாழ்நாள் முழுதும் மாற்றான் மனைவிகளுடன் விபச்சாரம் செய்து களிப்புற்ற இவர்களின் வாழ்வு ஒரு நாள் மரணத்தில் முடிந்தது.

பாவ கருமங்களைச் செய்ததன் காரணமாக, இவர்கள்

நால்வரும் மீண்டும் நரகத்தில் பிறந்தார்கள். மன்னரே, நடுநிசியில் தாங்கள் செவியுற்ற அந்த நான்கு அவல ஓசைகளும், நரகத்தில் துன்புறும் இந்த நால்வரும் நரக வேதனையில் எழுப்பிய துயரக்குரலே!

இதைக் கேட்ட மன்னரின் உள்ளம் அச்சத்தினால் நடுங்கியது. நானும் மற்றவன் மனைவியோடு விபச்சாரம் செய்யத் திட்டமிட்டேனே! இதனால், இரவெல்லாம் தூக்கமின்றி, அச்சத்தால் நடுங்கினேனே! இப்போது நான் பிறர் மனிவியோடு விபச்சாரம் செய்தேனென்றால், அடுத்த பிறவியில் நானும் இந்த நால்வரைப்போல் நரகத்தில் அல்லவா பிறந்து துன்புற வேண்டும்! பிறர் மனைவியோடு விபச்சாரம் செய்தல் பெரும் பாவம். இப்போதிலிருந்து, மனத்தாலும், பிறர் மனைவியை நாடமாட்டேன்" என மனத்தில் உறுதி பூண்டான்.

பகவான் புத்தரை மீண்டும் வணங்கிய பின், அரண்மனைக்குத் திரும்பினான். அரண்மனைக்குத் திரும்பிய மன்னன் பலி கொடுப்பதற்காகச் சேகரிக்கப்பட்ட எல்லா உயிர் ஜீவிகளையும் உடனே விடுவித்தான்.

ஆகவே, நாமும் இந்த மன்னனைப்போல் ஓர் உண்மையைக் கற்றுக்கொள்ள வேண்டும். எந்த உண்மையை நாம் கற்றுக் கொள்ள வேண்டும்?

இப்போது இவ்வுலக வாழ்வில் நாம் பாவம் செய்தோமென்றால், இவ்வுலகத் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொண்டாலும், நிச்சயமாக அடுத்த உலகத் தண்டனையிலிருந்து தப்பவே முடியாது.

## 3. இவ்வுலகத் தண்டனையிலிருந்து தப்பித்துக்கொண்டோருக்கு, அடுத்த உலகில் தண்டனை உண்டு.

தண்டனையில் இருவகை உண்டு. ஒன்று, இவ்வுலகத்தண்டனை; மற்றொன்று, அடுத்த உலகத் தண்டனை. இவ்வுலகத் தண்டனையை நாம் காணலாம். அடுத்த உலகத் தண்டனையை நாம் காண முடியாது.

இவ்வுலகத் தண்டனை என்பது, தற்போதைய வாழ்வில் செய்த குற்றங்களுக்குத் தற்போதைய வாழ்விலேயே தண்டிக்கப் படுவதாகும். அதாவது, இப்பிறப்பில் செய்த குற்றச் செயலுக்கு, இப்பிறவியிலேயே தண்டிக்கப்படுவதாகும்.

அடுத்த உலகத் தண்டனை என்பது, தற்போதைய வாழ்வில் செய்த குற்றங்களுக்கு, எதிர்காலப் பிறப்புகளில், ( அடுத்த உலகில்) தண்டிக்கப்படுவதாகும். அதாவது, இப்பிறப்பில் செய்த குற்றங்களுக்கு, இப்பிறவியிலேயே தண்டிக்கப்படாத போதிலும், உடலை விட்டு உயிர் பிரிந்த பின், அடுத்து வரும் பிறப்புகளில், (அடுத்த உலகில்) தண்டிக்கப்படுவதாகும்.

ஆகவே, பாவ கருமங்களைச் செய்வோர், ஒன்று, இவ்வுலகிலேயே தண்டிக்கப்படுவர்; தவறினால், அடுத்த உலகில் தண்டிக்கப்படுவர். சிலர், இவ்வுலகிலேயே தண்டிக்கப்படுவர்; மற்றும் சிலர், அடுத்த உலகில் தண்டிக்கப்படுவர். இவ்வுலகத் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வோர், தமக்கு அடுத்த உலகில் தண்டனை உண்டு என்பதை மறத்தல் கூடாது. ஏன்? அறநீதியின் நீதியிடமிருந்து எவரும் தப்ப முடியாது.

இவ்வுலகத் தண்டனை என்பது என்ன?

இவ்வுலகத் தண்டனையில் இருவகை உண்டு. ஒன்று , மானிட நீதி; மற்றொன்று, பாவம் பழுத்துத் தன் துன்பப் பலனை இங்கேயே

கொடுப்பதாகும். மானிட நீதி என்பது என்ன? சமூகத்தில், நீதியைக் காப்பதற்குச் சட்ட விதிகள் உண்டு. சமூகத்தில் நியாயத்தை நிலைநாட்டுவதற்காக மனிதன் அமைத்துக்கொண்டவை சமூகச் சட்ட விதிகள். சமூகச் சட்ட விதிகளை மீறினோரைச் சமூகம் தண்டிக்கும்.

அதாவது, சமூகச் சட்ட விதிகளை மீறி, பிறருக்குத் துன்பமிழைப்போரை, சமூகம் தண்டிக்கும். இது மானிட நீதி.

உதாரணத்திற்கு, பிறர் பொருளைக் கொள்ளையிட்டவனை, அதிகாரிகள் கைது செய்து, நீதி மன்றத்தில் நிறுத்தி, விசாரித்துத் தண்டனை வழங்குவார்கள். இது மானிட நீதி வழங்கும் தண்டனை. இது இப்பிறப்பில் செய்த குற்றத்திற்கு இப்பிறப்பிலேயே தண்டிக்கப்படுவதாகும். இது இவ்வுலகத் தண்டனை.

இவ்வகையான தண்டனையை நாம் காணலாம். எப்படிக் காணலாம்? குற்றம் செய்வோரை, அதிகாரிகள் கைது செய்து, நீதி மன்றத்தில் நிறுத்தி, விசாரித்துத் தண்டிப்பதை இவ்வுலகிலேயே நாம் காண்கிறோம்.

இவ்வுலகத் தண்டனையில் மற்றும் ஒன்று, பாவம் பழுத்துத் தன் துன்பப் பலனை இங்கேயே கொடுப்பதாகும். அப்படி என்றால் என்ன?

"பாவம் என்னை அண்டாது," என மமதையில், தீய கருமங்களைச் செய்தோர், பாவம் பழுத்துத் தன் துன்பப் பலனைத் தரும்போது, அதன் பிடியிலிருந்து தப்ப முடியாமல் அழுது, புலம்பி வேதனையுறுவதை இவ்வுலகிலேயே காணலாம்.

அதாவது, பாவத்தில் மகிழ்ந்தோரைப் பின்னால் துன்பங்கள் பற்றிக் கொள்வதை இவ்வுலகில் காண்கிறோம்.

எப்படிக் காண்கிறோம்?

பாவத்தில் மகிழ்ந்தோருக்கு அப்போது ஒரு இலாபமும், சுகமும் கிடைத்த போதிலும், பின்னால், வேதனை, பெரும் நஷ்டம், பொருள் அழிவு, பெருநோய்கள், உடலில் சேதம், பந்துக்களை இழத்தல்,

சித்தப்பிரமை, பயங்கரமான குற்றச்சாட்டு, பகை, பழி, பாவம், அச்சம் போன்ற துன்பங்கள் வருத்துவதை இவ்வுலகிலேயே காண்கிறோம். இவை யாவும் இவ்வுலகத் தண்டனையே.

ஆனால், பாவ கருமங்களைச் செய்தோர் அனைவருமே இவ்வுலகில் தண்டிக்கப்படுவதில்லை. அதாவது, தற்போதைய வாழ்வில் குற்றச் செயல்களைச் செய்தோர் அனைவருமே தற்போதைய வாழ்விலேயே தண்டிக்கப்படுவதில்லை. மானிட நீதியின் தண்டனையிலிருந்தும், இவ்வுலகத் தண்டனையிலிருந்தும் தப்பித்துக் கொள்வோரும் உண்டு.

கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள், வன் செயல்களைச் செய்வோர், அக்ரமம் செய்வோர், துரோகிகள், வஞ்சகர்கள், வேடதாரிகள் இவர்களில் பலர், தம் பாவங்களைத் திறமையாக மறைத்து, மானிட நீதியின் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வதையும்; பாவ கருமங்களைச் செய்வோர் பலர், செல்வமும், செல்வாக்கும் பெற்று, செருக்குடன் வாழ்வதையும் இவ்வுலகில் நாம் காண்கிறோம்.

பாவ கருமங்களைச் செய்வோர், இவ்வுலகத் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல், சுக வாழ்வு வாழ்வதையும் காணும்போது, "நீதி உண்டா" என நம் மனம் சஞ்சலமடைவது இயல்பே!

"நீதி உண்டா" என நாம் சஞ்சலம் அடைவதற்குக் காரணம், அடுத்த உலகையும், அடுத்த உலகத் தண்டனையையும் நாம் காண முடியாது.

ஆனால், அறநீதி ஒருபோதும் தவறுவதில்லை என்றும் ; பாவ கருமங்களைச் செய்தோர் இவ்வுலகத் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொண்ட போதிலும், அடுத்த உலகில் தண்டிக்கப்படுவர் என்றும் சான்றோர் இவ்வுலகிற்கு அறிவித்துள்ளார்கள். ஆகவே, நீதி உண்டு.

வாழ்க்கை மரணத்தோடு முடிந்துவிட்டது என்றும்; அடுத்த உலகம் இல்லை என்றும்; அடுத்த உலகில் ஒருவன் செயல்களின் பலனை அனுபவிப்பதில்லை என்பன போன்ற தவறான கருத்துகளைக்

கொண்டோமென்றால், நீதி இல்லைதான். ஏன்? பாவ கருமங்களைச் செய்வோர், இவ்வுலகத் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வது மட்டுமல்லாமல், அடுத்த உலகத் தண்டனையிலிருந்தும் தப்பித்துக் கொள்வார்கள்.

ஆனால், வாழ்க்கை மரணத்தோடு முடிவதில்லை என்றும்; அடுத்த உலகம் உண்டு என்றும்; அடுத்த உலகில் ஒருவன் தன் செயல்களின் பலனை அனுபவிக்க வேண்டும் என்றும் சான்றோர் இவ்வுலகிற்கு அறிவித்துள்ளதால், நீதி உண்டு.

ஆகவே, பாவ கருமங்களைச் செய்வோர், இவற்றை மறத்தல் கூடாது. அதாவது, தனது திறமையினால், இவ்வுலகத் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொண்ட போதிலும், அடுத்த உலகில் தண்டனை உண்டு என்பதை பாவக் கருமங்களைச் செய்வோர் மறத்தல் கூடாது.

"நீதி உண்டா" என நாம் சஞ்சலம் அடைவதற்கு மற்றுமொரு காரணம், "தற்போதைய வாழ்வில், பாவ கருமங்களைச் செய்தோர் அனைவருமே தற்போதைய வாழ்விலேயே தண்டிக்கப்பட வேண்டும்" என்று ஒரு கால வரம்பை நாம் அமைத்துக் கொள்வதாகும். ஆனால், அறநீதி இந்தக் கால வரம்பிற்கு கட்டுப்பட்டு செயல்படுவதில்லை.

அதாவது, தற்போதைய வாழ்வில் பாவ கருமங்களைச் செய்தோர் அனைவருமே, தற்போதைய வாழ்விலேயே தண்டிக்கப்பட வேண்டும்" என நாம் எதிர்பார்க்கும் ஒரு கால வரம்பிற்குக் கட்டுப்பட்டு அறநீதி செயல்படுவதில்லை. தற்போதைய வாழ்வில் செய்த பாவ கருமத்திற்கு, தற்போதைய வாழ்விலும் தண்டிக்கும்; இல்லையேல், எதிர்காலப் பிறப்புகளிலும் தண்டிக்கும். எப்போது, எங்கு, எப்படித் தண்டிக்கும் என்பதை நாம் அறிய முடியாது.

ஆகவே, இவ்வுலகத் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொண்டோர், அறநீதியின் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொண்டார்கள் என்று எண்ணலாகாது. அறநிதி ஒருபோதும் தன் நீதியில் தவறுவதில்லையாதலால், இவர்களுக்கு அடுத்த உலகில் தண்டனை உண்டு என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

அடுத்த உலகத்தைக் காண முடியாத நாம், " அடுத்த உலகைக் கண்டவர் உண்டா," என்று கேட்கலாம். அதாவது, "அடுத்த உலகம் உண்டு;" "அடுத்த உலகை நான் காண முடியும்," "பாவ கருமங்களைச் செய்தோர், அடுத்த உலகில் தண்டிக்கப்படுவதை நான் காண முடியும்," என அறிவித்தவர் இவ்வுலகில் உண்டா? எனக் கேட்கலாம்.

உண்டு. பகவான் புத்தர் மேற்கூறியபடி அறிவித்துள்ளார். எவ்வாறு அறிவித்துள்ளார் ?

தமக்குப் பூரண ஞான அறிவு உண்டென்றும்; தாம் தம் பூரண ஞான அறிவினால், அறவிதிகளையும், கர்ம வினைகளின் பலன்களையும் அறிய முடியுமென்றும்; சாதாரண மக்களுக்கில்லாத தேவ பார்வை தமக்கு உண்டென்றும்; தாம் தம் தேவ பார்வையால் அடுத்த உலகையும், அடுத்த உலகில் ஒருவனின் கதி என்ன என்பதையும் பார்க்க முடியுமென்றும் பகவான் புத்தர் இவ்வுலகிற்கு அறிவித்துள்ளார்.

கண் பார்வை இல்லாத ஒரு மனிதனையும், கண் பார்வையுள்ள ஒரு மனிதனையும், உவமையாக வைத்து, இவ்வுண்மையைப் பகவான் புத்தர் கீழ்க்கண்டவாறு உலகிற்கு அறிவித்துள்ளார்:

> ***"கதவுகளையுடைய இரு வீடுகளுக்கிடையே நிற்கும் பார்வையுள்ள மனிதர், மக்கள் வீடுகளிலிருந்து வெளியாவதையும்; ஒரு வீட்டிலிருந்து வெளியாகி மற்ற வீட்டினுள் நுழைவதையும்; வீடுகளுக்கிடையே நடமாடுவதையும் தெளிவாகப் பார்க்க முடியும்.***
>
> ***அதுபோலவே, நான் என் தேவ பார்வையால், உயிர்கள் இறந்த பின், அவரவர் கர்ம பலனுக்கு ஏற்றவாறு மீண்டும் எங்குப் பிறக்கிறார்கள் என்பதைப் பார்க்க முடியும். "***

இங்கு " வீடு " என்பது பிறப்பைக் குறிக்கும்.

"ஒரு வீட்டிலிருந்து வெளியாகி" என்பது ஒரு பிறப்பு முடிந்த பின்; அதாவது, இவ்வுலக வாழ்வு முடிவுற்ற பின் என்பதைக் குறிக்கும்.

“மற்ற வீட்டினுள் நுழைவது " என்பது, அடுத்த பிறப்பைக் குறிக்கும்; அல்லது அடுத்த உலகப் பிறப்பைக் குறிக்கும்.

"ஒரு வீட்டிலிருந்து வெளியாகி, மற்ற வீட்டினுள் நுழைவது” என்பது இவ்வுலக வாழ்வு முடிவுற்ற பின், அடுத்த உலகில் மீண்டும் பிறப்பதைக் குறிக்கும்.

"பார்வையுள்ள மனிதர்” என்பது தேவ பார்வையையுடைய பகவான் புத்தரைக் குறிக்கும்.

ஒரு வீட்டிலிருந்து வெளியாகி, மற்ற வீட்டினுள் நுழைவோரை, பார்வை இல்லாத மனிதர் காண முடியாது. ஏன்? அவர் கண்களுக்குப் பார்வை இல்லை. அதுபோல், அடுத்த உலகையும், அடுத்த உலகில் ஒருவனின் கதி என்ன என்பதையும் நாம் காண முடியாது. ஏன்? நம் கண்களுக்கு அவற்றைக் காணும் ஆற்றல் இல்லை.

மரணத்திற்குப் பின் ஒருவனின் நிலை என்ன என்பதைக் காணும் ஆற்றல் நம் கண்களுக்கு இல்லை என்பதால், அடுத்த உலகைப் பொறுத்தவரை, நாம் பார்வை இல்லாக் குருடர்கள் போல்தான்.

ஆனால், பார்வை உள்ள ஒரு மனிதர், ஒரு வீட்டிலிருந்து வெளியாகி, மற்ற வீட்டினுள் நுழைவோரைக் காண முடியும். அதுபோல், உடலை விட்டு உயிர் பிரிந்த பின், மனிதர்கள் மீண்டும் எங்குப் பிறக்கிறார்கள் என்பதைத் தாம் பார்க்க முடியும் என்கிறார் பகவான் புத்தர்.

அதாவது, அடுத்த உலகையும், மரணத்திற்குப் பின் அடுத்த உலகில் ஒருவனின் கதி என்ன என்பதையும் மனிதர்கள் தம் கண் பார்வையால் காண முடியாதென்றும்; அடுத்த உலகையும், அடுத்த உலகில் ஒருவனின் கதி என்ன என்பதையும் பொறுத்தவரை, மனிதர்கள் கண் பார்வை இல்லாத குருடர்கள் போல்தான் என்றும்; ஆனால் மனிதர்களுக்கு இல்லாத தேவ பார்வை தமக்கு உண்டென்றும்; தாம் தம் தேவ பார்வையினால், அடுத்த உலகையும், அடுத்த உலகில் ஒருவனின் கதி என்ன என்பதையும் பார்க்க முடியும் என்றும் பகவான் புத்தர் இவ்வுலகிற்கு அறிவித்துள்ளார்.

பார்வை இல்லாத நமக்கு, நம் நலனைக் கருதி, பார்வையுள்ள பகவான் புத்தர் வழிகாட்டும்போது, அதை ஏற்பதுதான் அறிவுடைமை.

இருளில் பாதை தெரியாமல் தடுமாறும் ஒருவனுக்கு, விளக்கேற்றிப் பாதையைக் காண்பிப்பது போல், அறியாமை என்னும் இருளில் மூழ்கி, பிறப்பு, மரணம் என்னும் பெருங்கடலில் திசை தெரியாமல் தத்தளிக்கும் உயிர்களுக்கு, பிறப்பினால் ஏற்படும் துன்பங்களிலிருந்து, விடுபடுவதற்குரிய வழிமுறைகளே, பகவான் புத்தர் அருளிய தர்ம உபதேசம் என்பதை அறிவுடையோர் அறிய வேண்டும்.

நம் சுய அறிவிற்கு விளங்கவில்லை என்பதால், தர்ம உபதேசம் கூறும் உண்மைகள் பொய்யாகிவிடாது. இவை யாவும் நம் சுய அறிவிற்கு எட்டாத உண்மைகள் என அறிவதே அறிவுடைமை. நம் சுய அறிவிற்கு விளங்கவில்லை என்பதால், அறவிதிகளும், வினைப் பயன்களும், அடுத்த உலகங்களும் பொய்யாவதில்லை. இவற்றைப் பொய்யென்று இகழ்ந்துரைத்தோர் பெருமை அடைந்ததுமில்லை; நம்பினோர் கெட்டதுமில்லை.

அடுத்த உலகம் இல்லை; வினைப்பயன் இல்லை; அடுத்த உலகில் ஒருவன் தன் வினைப் பயனை அனுபவிப்பதில்லை, என்பன போன்ற தவறான கருத்துகள் காரணமாக, சான்றோர் அருளிய தர்ம உபதேசங்களை அலட்சியப்படுத்தி, உதாசீனம் செய்வோருக்கு, பகவான் புத்தர் இவ்வாறும் கூறியுள்ளார்:

***ததாகதர் (பகவான் புத்தர்) தம் தேவ பார்வையால், உயிர்கள் இறந்து மீண்டும் பிறப்பதை அறிவார். உயிர்கள், இறந்த பின், அவரவர் வினைப் பயனுக்கு ஏற்றவாறு, மீண்டும் எங்கு பிறக்கிறார்கள் என்பதைத் ததாகதர் தம் தேவ பார்வையால் பார்க்க முடியும். தவறான கருத்தினால், சான்றோர் அருளிய தர்ம உபதேசங்களை இகழ்ந்து, மனத்தாலும், சொல்லாலும், உடனாலும் தீமை செய்தோர், உடலை விட்டு உயிர் பிரிந்தபின், நரகத்திலும், மற்றத் துன்பப் பிறவிகளிலும் மீண்டும் பிறப்பதை ததாகதர் தம் தேவ பார்வையால் பார்க்க முடியும். சரியான கருத்துகளின் காரணமாக, சான்றோர் அருளிய தர்ம உபதேசங்களைப் போற்றி, மனத்தாலும், சொல்லாலும், உடலாலும் நல்லதைச் செய்தோர், உடலை விட்டு உயிர் பிரிந்தபின், தெய்வலோகத்தில் பிறந்து***

***இன்புறுவதையும் ததாகதர் தம் தேவ பார்வையால் பார்க்க முடியும்.***

ஆகவே, பாவம் இல்லை, புண்ணியம் இல்லை, அடுத்த உலகம் இல்லை, அடுத்த உலகில் ஒருவன் தன் செயல்களின் பலனை அனுபவிப்பதில்லை என்பன போன்ற தவறான கருத்துகளைப் பின்பற்றி, தீய செயல்களைச் செய்வோரைப் பகவான் புத்தர் எச்சரிக்கின்றார் . எவ்வாறு எச்சரிக்கின்றார்?

"இவ்வுலகத் தண்டனையிலிருந்து நீ தப்பித்துக்கொண்ட போதிலும், அடுத்த உலகில் நிச்சயமாக நீ துன்பப்படுவாய்."

ததாகதரை (புத்தரை) நம்பினோர் ஈருலகிலும் சுகம் பெறுவார்கள் என்றும்; தர்ம உபதேசம் இவ்வுலகின் அறியாமை என்னும் இருளைப் போக்கும் ஒளி என்றும்; அதனால் இவ்வுலகம் நன்மை பெறும் என்றும் பகவான் புத்தர் கூறியுள்ளார்.

**“ததாகதர் தோன்றுதல், இவ்வுலகில் பெரும் ஒளி தோன்றுவது போல்; பெரும் வெளிச்சம் தோன்றுவது போல், அவர் தோன்றுவது மிக அபூர்வம். அவருடைய தோற்றத்தால் இவ்வுலகம் நன்மை பெறும். அவருடைய தோற்றத்தால் பலர் நன்மை பெறுவார்கள். இவ்வுலகின் மேல் இரக்கம் கொண்டு, மனிதர்களின் நன்மைக்காகவும், தெய்வங்களின் நன்மைக்காகவும் ததாகதர் உலகில் தோன்றுகிறார்.**

**“ததாகதர் தர்ம உபதேசம் செய்பவர். அவர் இவ்வுலகிற்குத் தர்ம உபதேசத்தை அறிவித்து, விளக்கி, தெளிவுபடுத்தி, அதை இங்கு நிலை நாட்டுவார். தர்ம உபதேசம் ஒருவருக்கு இளமையிலும் சுகமளிக்கும், யௌவனத்திலும் சுகமளிக்கும்; முதுமையிலும் சுகமளிக்கும்.**

மனித குலத்தின் நன்மைக்காகத் தர்ம உபதேசம் வழங்கப்பட்ட போதிலும், மனிதர்களில் பெரும்பாலோர், இதை நம்புவதில்லை. அவநம்பிக்கை கொண்டு, அலட்சியப்படுத்தி, உதாசீனப் படுத்துவோரும்; அப்படியே ஏற்றாலும் , தர்ம உபதேசங்களை முறையாகக் கற்று, அதில் ஒழுகாமல், குழப்பத்தில் வாழ்வோரே மிக அதிகமானோர்.

# 4. அடுத்த உலகத் தண்டனை

## 4.1. பேய்ப் பிறப்பு.

அடுத்த உலகத் தண்டனையில் ஒன்று பேய்ப் பிறப்பு. அதாவது, இவ்வுலக வாழ்வில் பாவ கருமங்களைச் செய்தோர், பாவ கருமங்களைச் செய்ததன் காரணமாக, உடலை விட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகில் பேயாகப் பிறந்து துன்பப் படுவதாகும். இதை நாம் காண முடியாது. ஏன்? மரணத்திற்கு அப்பால், மனிதனின் நிலை என்ன என்பதை அறியும் ஆற்றல் நம் புலன்களுக்கு இல்லை.

ஆனால் மரணத்திற்கு அப்பால் மனிதனின் நிலை என்ன என்பதைத் தாம் அறிவார் என்றும் ; சாதாரண மக்களுக்கு இல்லாத பூரண ஞான அறிவும், தேவ பார்வையும் தமக்கு உண்டு என்றும் ; இவ்வுலக வாழ்வில் பாவ கருமங்களைச் செய்தோர், பாவ கருமங்களைச் செய்ததன் காரணமாக, உடலை விட்டு உயிர் பிரிந்த பின், பேயாக மீண்டும் பிறப்பதையும் ; பேயாகப் பிறந்து துன்புறுவதையும் தாம் தம் தேவ பார்வையால் பார்க்க முடியும் என்றும் பகவான் புத்தர் இவ்வுலகிற்கு அறிவித்துள்ளார்.

> ***பேய் உலகை நான் அறிவேன்; அங்கு செல்லும் வழியையும் நான் அறிவேன்; எவ்வகையான நடத்தை, அதன் காரணமாக உடலை விட்டு உயிர் பிரிந்த பின், ஒருவருக்கு பேய் உலகில் மீண்டும் பிறப்பு அமையும் என்பதையும் நான் அறிவேன்"***

சில மனிதர்களைப் பார்க்கும் போதே, அவர்கள் அடுத்த உலகில் பேயாகப் பிறப்பார்கள் என்று தமக்கு முன்னதாகவே தெரியும் என்கிறார் பகவான் புத்தர்.

> ***மனிதர்களின் மனத்தை நான் அறிவேன் ; மனிதர்களின் நடத்தையை நான் அறிவேன். சில மனிதர்களைக் காணும்போது, " இந்த மனிதனின் நடத்தை இந்த மனிதரைப் பேய் உலகிற்குக் கொண்டு செல்லும்; இவர் பேய்***

**உலகிற்குச் செல்லும் வழியில் செல்கிறார்; இவர் பேய் உலகை நோக்கிப் போகிறார்; இறந்த பின் , உடலை விட்டு உயிர் பிரிந்த பின், இந்த மனிதர் பேய் உலகில் பிறப்பார்" என நான் அறிவேன்.**

**"அது போல , சில காலம் கழித்து, அந்த மனிதர் இறப்பதையும்; இறந்து உடலில் இருந்து உயிர் பிரிந்த பின், பேய் உலகில் மீண்டும் பிறப்பதையும்; பேய் உலகில் துன்பப் படுவதையும், நான் என் தேவ பார்வையால் பார்க்க முடியும்."**

(பகவான் புத்தர் என்ன சொல்கிறார் என்றால், எல்லா மனிதர்களின் மனத்தையும் தாம் அறிவாராம். அதாவது, ஒழுக்கமுடையோரைக் காணும்போது, “இவர் நடத்தையில் ஒழுக்கமுள்ளவர் என அறிவாராம். ஒழுக்கமற்றோரைக் காணும்போது, இவர் நடத்தையில் ஒழுக்கமில்லை" என அறிவாராம். அனைவருடைய ஒழுக்கத்தையும் பகவான் புத்தர் அறிவாராகையால், சிலரைக் கண்டதும், அவருக்கு அவர்களைப்பற்றித் தெரியுமாம்.

என்னவென்று தெரிந்து கொள்வார்?

இந்த மனிதரின் நடத்தையில் ஒழுக்கமில்லை. இவருடைய நடத்தை, இவரைப் பேய் உலகிற்குக் கொண்டு செல்கிறது. உடலை விட்டு உயிர் பிரிந்த பின், பேய் உலகில் எழுவார்." என அந்த மனிதரின் அடுத்த உலகக் கதியை தாம் முன்னதாகவே அறிவாராம்.

(அதுபோலவே, அந்த மனிதர் இறந்த பின், பேயாகப் பிறந்து துன்பப் படுவதையும் தாம் தம் தேவ பார்வையால் பார்க்க முடியும் என்கிறார்.)

எத்தகைய மனிதர்கள், உடலைவிட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகில் பேயாகப் பிறப்பார்கள்? அதாவது, எந்தக் காரணத்தினால் சிலருக்குப் பேய் உலகில் மீண்டும் பிறப்பு அமைகிறது? இவ்வுலக வாழ்வு முடிவுற்ற பின், உடலை விட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகில், ஏன் சிலர் பேயாகப் பிறக்கிறார்கள்? காரணம் என்ன என்பதைப் பகவான் புத்தர் விளக்கி உள்ளார்:

**“தர்ம உபதேசங்களையும், அடுத்த உலகையும் பழித்து, அலட்சியப்படுத்தி; தவறான கொள்கைகளைப் பின்பற்றி; எண்ணங்களாலும், சொற்களாலும், செயல்களாலும் தீயொழுக்கத்தை மேற்கொண்டோர், உடலை விட்டு உயிர் பிரிந்த பின், தீய கருமங்களின் காரணமாக, பேய் (பிசாசு) உலகில் பிறப்பதை நான் என் தேவ பார்வையால் பார்க்க முடியும்."**

ஏன் சிலர் பேயாகப் பிறக்கிறார்கள் என்னும் காரணத்தை, பகவான் புத்தர் மேலே தெளிவாக விளக்கியுள்ளார். இங்குச் சிலர் தர்ம உபதேசங்களை அலட்சியப் படுத்துவார்கள்; அடுத்த உலகை ஏளனம் செய்வார்கள். இவர்கள் தவறான கொள்கைகளைப் பின்பற்றுவார்கள்.

பாவம் இல்லை, புண்ணியம் இல்லை என்பார்கள்; அடுத்த உலகம் இல்லை, மரணத்திற்கு அப்பால் வேறு வாழ்வு இல்லை, அடுத்த உலகில் எவரும் தம் செயல்களின் பலனை அனுபவிப்பதில்லை என்பார்கள். மனிதன் பிறப்பது ஒருமுறைதான், மரணத்தோடு வாழ்க்கை முடிந்துவிட்டது, மரணத்திற்கு அப்பால் வேறு உலகம் இல்லை என்பார்கள்.

தர்ம உபதேசங்களையும், அடுத்த உலகையும் இகழும் இவர்கள், தவறான கொள்கைகளைப் பின்பற்றி, இவ்வுலக வாழ்வில் பாவ கருமங்களைச் செய்வார்கள். இவ்வுலக வாழ்வில் பாவ கருமங்களைச் செய்ததன் காரணமாக, உடலை விட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகில் இவர்கள் பேயாகப் பிறப்பார்கள் எனப் பகவான் புத்தர் விளக்குகின்றார்.

ஆகவே, தவறான கொள்கைகளைப் பின்பற்றி, பாவ கருமங்களைச் செய்வோர், தம்மைத் தாமே எச்சரித்துக் கொள்ள வேண்டும்.

"இப்போது நான் பாவ கருமங்களைச் செய்தேன் என்றால், ஒருகால், நானும் அடுத்த உலகில் பேயாகப் பிறந்து துன்புற வேண்டுமே."

இவ்வாறு தம்மைத் தாமே எச்சரித்து, தீயொழுக்கங்களைக் கைவிட்டு, நன்னெறி ஒழுக்க நெறிகளை மேற்கொள்ள வேண்டும்.

## 4.1.(i) நந்தாவின் கதை

பகவான் புத்தர் வாழ்ந்த காலத்தில் இந்தியாவில் சவத்தி என்றொரு பட்டணம் இருந்தது. சவத்தி பட்டணத்திற்கு அருகிலிருந்த ஒரு கிராமத்தில், நந்தசேனா என்பவர் வாழ்ந்து வந்தார். நந்தசேனா பக்தியுடையவர். பகவான் புத்தர் அருளிய தர்ம உபதேசங்களை நம்பும் மனத்துடன் கேட்டு, பழி பாவங்களுக்கு அஞ்சி வாழ்ந்து வந்தார்.

நந்தசேனாவின் மனைவி, நந்தா தெய்வ நம்பிக்கை இல்லாதவள். பக்தி இல்லாதவள். பேராசைக்காரி ; கோபக்காரி; கடுஞ்சொற்களையும், வெறுக்கும் சொற்களையும் பேசுவாள் ; வணக்கமும் , மரியாதையும் இல்லாதவள்; கணவனை மதியாதவள்; ஆணவக்காரி.

வம்புக்காரி; வரிந்து கட்டிக்கொண்டு சண்டை சச்சரவுகளுக்குப் போவாள்; கொட்டும் மேளத்தைப் போல் வசை மொழிகளால் பிறரைத் திட்டுவாள்.

நந்தாவின் உலக வாழ்வு ஒரு நாள் மரணத்தில் முடிந்தது. இவ்வுலக வாழ்வு முடிவுற்று உடலை விட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகில் மீண்டும் பேயாகப் பிறந்தாள். பேயாகப் பிறந்த நந்தாவிற்கு, தன் முன்னால் பிறப்பு ஞாபகத்திற்கு வந்தது. தன் முற்பிறப்பு ஞாபகத்திற்கு வந்ததும், ஒரு நாள் நந்தசேனா கிராமத்திலிருந்து வெளியே வந்த போது, நந்தா அவன் முன் தோன்றினாள்.

**நந்தசேனா:** உன் தோற்றம் கறுப்பாகவும், விகாரமாகவும் இருக்கிறதே! உன் உடல் கொடூரமாகவும், பார்ப்பதற்குப் பயங்கரமாகவும் இருக்கிறதே! உனக்குச் சிவந்த கண்களும், மஞ்சள் நிறத்தில் பற்களும் இருக்கின்றனவே! நீ மானிடப் பிறவி இல்லை என்று கருதுகிறேன்.

**பேய்:** நந்தசேனா, நான் நந்தா. முன்பு நான் உன் மனைவி. இழிவான நடத்தை காரணமாக நான் இங்கிருந்து பேய் உலகிற்குச் சென்றேன்.

**நந்தசேனா:** மனத்தாலோ, சொல்லாலோ, உடலாலோ என்ன பாவச் செயலைச் செய்ததன் காரணமாக , இங்கிருந்து பேய் உலகிற்குச் சென்றாய்?

**பேய்:** நந்தசேனா, என்னுடைய முன்னால் பிறப்பில், நான் ஒரு கோபக்காரி; வம்புக்காரி; கடுஞ்சொற்களையும், வெறுக்கும் சொற்களையும் பேசினேன்; வரிந்து கட்டிக்கொண்டு சண்டை சச்சரவுகளைச் செய்தேன்; வசை மொழியால் பிறரைத் திட்டினேன்; தர்ம உபதேசங்களையும், அடுத்த உலகையும் அலட்சியப் படுத்தி உதாசீனம் செய்தேன்; உனக்கும் நான் மரியாதை காட்டவில்லை. ஆகவே, இங்கிருந்து நான் பேய் உலகிற்குச் சென்றேன்.

**நந்தசேனா:** நான் ஒரு மேலாடை தருகிறேன். அதை அணிந்துகொள்: ஆடையை அணிந்து கொண்டபின், நான் உன்னை வீட்டிற்கு அழைத்துச் செல்கிறேன். உடையும், உணவும் உனக்குக் கிடைக்கும். நீ உன் மகன்களைக் காணலாம். உன் வம்புக்கார மகளையும் காணலாம்.

**பேய்:** உன் கையிலிருந்து என் கையால் பெறுவது எனக்கு நன்மை தராது. நீ கொடுக்கும் எதுவும் என் வேதனையைத் தணிக்காது. பகவான் புத்தரிடம் எனக்காக வேண்டிக் கொள். என் பெயரால் நற்செயல்களையும், தான தர்மங்களையும் செய். எனக்கூறி அப்பேய் மறைந்து விட்டது.

## 4.1.(ii) தனபாலனின் கதை.

தச்சண்ணா இராஜ்யத்தில், எரக்கச்சா பட்டணத்தில், தனபாலன் என்னும் செல்வந்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். இவர் இறை நம்பிக்கை இல்லாதவர்; பக்தி இல்லாதவர்; தவறான கொள்கைகளைப் பின்பற்றுபவர். பொருட்செல்வம் பெற்ற இவரை, சிறுமையும், செருக்கும் ஆட்கொண்டன.

தவறான கொள்கைகளைப் பின்பற்றிய இவர், நல்ல ஒழுக்க நெறிகளையும், அடுத்த உலகையும், அடுத்த உலக வாழ்க்கையையும், பரிகசித்து ஏளனம் செய்தார். தன்னடக்கத்தையும், நேர்மையையும், புண்ணிய கருமங்களையும் எள்ளி நகையாடினார்.

"பாவமும் இல்லை, புண்ணியமும் இல்லை, கொடுப்பதில் பலன் இல்லை," எனப் பேசிய இவர், தானும் நற்செயல்கள் எதுவும் செய்யாமல், நற்செயல்களைச் செய்தோரையும் நிந்தனை செய்து வந்தார். "தன்னடக்கத்திற்கு ஏது பலன்" எனத் தன்னடக்கத்தை இகழ்ந்துரைத்தார்.

இவருடைய இவ்வுலக வாழ்வை மரணம் ஒருநாள் துண்டித்தது. உடலை விட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகில் பாலை வனத்தில் பேயாகப் பிறந்தார். பேயாகப் பிறந்த இவரைப் பசியும், தாகமும் வருத்தி வாட்டின. பாலை வன வனாந்திரத்தில், இங்குமங்கும் அலைந்து திரிந்தார்.

அச்சமயம், சில வியாபாரிகள், பாலை வனத்தைக் கடந்து சென்று கொண்டிருந்தார்கள். மாலையானதும், அன்றிரவை ஒரு மரத்தடியில் கழித்தார்கள். இதைக்கண்ட அப்பேய், அங்கு சென்றால் தாகத்தைத் தீர்க்க நீர் ஏதேனும் கிடைக்கும் என எண்ணி அங்குச் சென்றது. தங்கள் முன் தோன்றிய பேயைப் பார்த்ததும், வியாபாரிகள் இவ்வாறு கேட்டார்கள் :

**வியாபாரிகள் :** நிர்வாணக் கோலத்தில், உடல் மெலிந்து எலும்பும் தோலுமாய், பார்ப்பதற்குக் கொடூரமாயும், பயங்கரமாயும் தோன்றும் நீ யார்?

**பேய்:** மதிப்பிற்குரியோரே, நான் ஒரு பேய். பேய் உலகைச் சேர்ந்த ஒரு துர்ப்பாக்கியசாலி. பாவ கருமங்களைச் செய்ததால், இங்கிருந்து பேய் உலகிற்குச் சென்றேன்.

**வியாபாரிகள்:** மனத்தாலோ, சொல்லாலோ, உடலாலோ எத்தகைய பாவச் செயலைச் செய்ததன் காரணமாக, இங்கிருந்து பேய் உலகிற்குச் சென்றாய்?

**பேய்:** முன்பு எரக்கச்சா பட்டணத்தில் நான் ஒரு செல்வந்தன். தனபாலன் என மக்கள் என்னை அறிவார்கள். தங்கமும், வைடூரியமும், முத்தும் என்னிடம் பெரும் அளவில் இருந்தன.

செல்வம் நிறைய இருந்த போதிலும், எனக்குக் கொடுக்க மனம் இல்லை. நான் உணவருந்தும்போது “பிச்சைக்காரர்கள் வந்துவிடுவார்களோ" என எண்ணி வீட்டின் கதவுகளைப் பூட்டிவிட்டு உணவருந்துவேன்.

பக்தி இல்லாத நான், அடுத்த உலகையும், அடுத்த உலக வாழ்வையும் அலட்சியப்படுத்தி ஏளனம் செய்தேன். நன்னெறி உபதேசங்களையும், நல்லொழுக்க நெறிகளையும், பழித்தேன்.

பேராசையும், கருமித்தனமும், நீசத்தனமும், என்னை ஓர் இழிவானவனாக்கியது. தான தர்மங்கள் செய்வோரையும், நற்செயல்களைச் செய்வோரையும், "கொடுப்பதில் பலனில்லை; தன்னடக்கத்திற்கு ஏது பலன்," எனக்கூறித் தடுத்தேன்.

குளங்களையும், மக்கள் இன்புற அமைக்கப்பட்ட சிங்கார வனங்களையும், சாலை மருங்கில் இருந்த நீர் அருந்தும் நிலையங்களையும்; பயணம் செய்வதற்குக் கடினமான இடங்களில் உள்ள பாதைகளையும் நான் அழித்தேன்.

ஆகவே, அறமில்லாச் செயல்களைச் செய்த நான், பாவ கருமங்களைச் செய்த பாவியாக இவ்வுலகை விட்டுப் போனேன். பேய் உலகில் பிறந்தேன். பேய் உலகில் பிறந்த என்னை, பசியும், தாகமும் வாட்டுகின்றன. நான் இறந்து ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன.

நீரையும், ஆகாரத்தையும் நான் காண முடியாது. "கொடுக்காதவன் எல்லாம் இழப்பான். எல்லாவற்றையும் இழப்பதுவும் கொடுக்காததால்தான்." பேய்கள் இதை அறிவார்கள். "கொடுக்காதவன் எல்லாவற்றையும் இழப்பான்."

முன்பு நான் கொடுக்கவில்லை. பொருள் இருந்தும் நான் கொடுக்கவில்லை. நற்செயல்களைச் செய்வது கடமை என்ற போதிலும், நான் நற்செயல்களைச்செய்யவில்லை; எனக்கு நான் பாதுகாப்பைத் தேடிக் கொள்ளவில்லை.

இப்போது நான் வருந்திப் பரிதவிக்கிறேன். என் செயல்களின் பலனை இப்போது நான் சுமக்கிறேன். இன்னும் நான்கு மாதங்களில் எனக்கு மரணம் வரும். இங்கிருந்து, மிகக் கொடுமையான, பயங்கரமான நரகத்திற்குள் விழுவேன்.

அங்கு நீண்ட காலத்திற்குப் பெரும் வேதனையை அனுபவிப்பேன். இத்துன்பங்கள் யாவும் என்னுடைய பாவ கருமங்களின் பலனே! இப்போது நான் என் கதியை எண்ணி வருந்திப் புலம்புகிறேன்.

இதன் காரணமாக இங்குக் கூடியுள்ள உங்கள் எல்லாருக்கும் மிகச் சிறப்பான ஒன்றைக் கூறுவேன். "இரகசியமாகவோ, பலர் அறியவோ, பாவம் செய்யாதீர்கள்." பாவம் செய்தீர்களென்றால், அது துன்பப் பலனைத் தரும்போது, வானில் எழுந்து பறந்தாலும், அதன் பிடியிலிருந்து தப்ப முடியாது.

தாய்க்கும், தந்தைக்கும் மரியாதை தெரிவியுங்கள். குடும்பத்தில் பெரியோருக்கு மரியைதை தெரிவியுங்கள். சாதுக்களுக்கும், நல்லொழுக்கம் உள்ள நல்லோருக்கும் மரியாதை காட்டுங்கள். இது உங்களைத் தெய்வலோகத்திற்கு அழைத்துச் செல்லும்.

வியாபாரிகள் பேயின் மேல் அனுதாபப்பட்டு, அதன் வாயில் சிறிது நீரை ஊற்றினார்கள். ஆனால், அதன் பாவ கருமங்களின் காரணமாக, பேய் தன் வாயில் ஊற்றப்பட்ட நீரை விழுங்க முடியவில்லை.

**வியாபாரிகள் :** உன் வேதனை கொஞ்சம் கூடக் குறையவில்லையா?

**பேய்:** “என் வேதனை குறைய வேண்டுமென்றால், பகவான் புத்தரிடம்

எனக்காக வேண்டிக் கொள்ளுங்கள். சாதுக்களுக்கு என் பெயரால் தான தர்மங்கள் செய்யுங்கள்" எனக் கூறி, அந்தப் பேய் மறைந்துவிட்டது.

## 4.2 மிருகப் பிறப்பு

அடுத்த உலகத் தண்டனையில் மற்றும் ஒன்று மிருகப் பிறப்பு. அதாவது, இவ்வுலக வாழ்வில் பாவ கருமங்களைச் செய்தோர், பாவ கருமங்களைச் செய்ததன் காரணமாக, உடலை விட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகில் மிருகமாய்ப் பிறந்து துன்பப் படுவதாகும்.

மிருக உலகை நாம் காணலாம். மிருகங்கள் படும் துன்பங்களையும் நாம் காணலாம். மிருகங்கள் படும் துன்பங்கள் பல.

மாமிசத்திற்காகவும், இரத்தத்திற்காகவும், எலும்புக்காகவும், தோலுக்காகவும், உரோமத்திற்காகவும் சில மிருகங்கள் கொல்லப்படுகின்றன.

சில மிருகங்கள் கேளிக்கைக்காகவும், விளையாட்டிற்காகவும், வேடிக்கைக்காகவும், மனிதனால் துன்புறுத்தப்படுகின்றன.

சில மிருகங்கள் மனிதனுக்கு அடிமைகளாக உழைக்கின்றன. மிருகங்கள் மனிதனால் அடிமைப்படுத்ததப்பட்டு, தடிகளாலும், சாட்டைகளாலும், அங்குசத்தாலும், மற்றும் பல வகையிலும் வருத்தி, அடித்துத் துன்புறுத்தப்படுகின்றன.

இவையன்றி, மிருக உலகிலும், மிருகங்கள் ஒன்றையொன்று கொன்று, தின்று வருகின்றன.

ஆகவே, மிருக உலகம், பெரும் துன்பம் நிறைந்த உலகம். மிருக உலகையும், மிருகங்கள் படும் துன்பங்களையும் நாம் கண்ட

போதிலும், உடலை விட்டு உயிர் பிரிந்த பின், ஒரு மனிதர் மீண்டும் மிருகமாகப் பிறப்பதை, நாம் காண முடியாது. அதாவது, இவ்வுலக வாழ்வில் பல பாவ கருமங்களைச் செய்ததன் பலனாக, உடலை விட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகில் ஒருவர் மிருகமாகப் பிறப்பதை நாம் காண முடியாது. இதைக் காணும் ஆற்றல் நம் புலன்களுக்கு இல்லை.

ஆனால், மரணத்திற்கு அப்பால், மனிதர்களின் நிலை என்ன என்பதைத் தாம் அறிவார் என்றும்; சாதாரண மனிதர்களுக்கு இல்லாத பூரண ஞான அறிவும், தேவ பார்வையும் தமக்கு உண்டென்றும்; இவ்வுலக வாழ்வில் பாவ கருமங்களைச் செய்தோர், பாவ கருமங்களைச் செய்ததன் காரணமாக, உடலை விட்டு உயிர் பிரிந்த பின், மிருகமாக மீண்டும் பிறப்பதையும்; மிருகமாகப் பிறந்து துன்பப்பபடுவதையும் தாம் தம் தேவ பார்வையால் பார்க்க முடியும் என்றும், பகவான் புத்தர் இவ்வுலகிற்கு அறிவித்துள்ளார்.

**மிருக உலகை நான் அறிவேன்; அங்குச் செல்லும் வழியையும் நான் அறிவேன்; எவ்வகையான நடத்தை, அதன் காரணமாக உடலை விட்டு உயிர் பிரிந்த பின், ஒருவருக்கு மிருக உலகில் பிறப்பு அமையும் என்பதையும் நான் அறிவேன்.**

சில மனிதர்களைப் பார்க்கும்போதே, அவர்கள் அடுத்த உலகில் மிருகமாகப் பிறப்பார்கள் என்பது தமக்கு முன்னதாகவே தெரியும் என்கிறார் .

**மனிதர்களின் மனத்தை நான் அறிவேன். மனிதர்களின் நடத்தையை நான் அறிவேன். சில மனிதர்களைக் காணும் போது, " இந்த மனிதரின் நடத்தை இவரை மிருக உலகிற்குக் கொண்டு செல்லும்; இவர் மிருக உலகிற்குச் செல்லும் வழியில் செல்கிறார்; இவர் மிருக உலகை நோக்கிச் செல்கிறார். இறந்த பின், உடலிலிருந்து உயிர் பிரிந்த பின், இந்த மனிதர் மிருகமாகப் பிறப்பார்," என்பதை நான் அறிவேன்.**

**"அது போலவே, சில காலம் கழித்து, அந்த மனிதர் இறப்பதையும்; இறந்து உடலிலிருந்து உயிர் பிரிந்து,**

**மிருகமாகப் பிறப்பதையும்; மிருகமாகப் பிறந்து துன்பப் படுவதையும் நான் என் தேவ பார்வையால் பார்க்க முடியும்."**

( பகவான் புத்தர் என்ன சொல்கிறார் என்றால், எல்லா மனிதர்களின் மனத்தையும் தாம் அறிவாராம். அதாவது, ஒழுக்கமுடையோரைக் காணும்போது, "இவர் ஒழுக்கமுடையவர் என அறிவாராம். ஒழுக்கமற்றோரைக் காணும் போது "இவர் நடத்தையில் ஒழுக்கமில்லை" என அறிவாராம். எல்லாருடைய ஒழுக்கத்தையும் அறிவாராகையால், சில மனிதர்களைப் பார்த்ததும் அவருக்குத் தெரியுமாம்.

என்னவென்று தெரியுமாம்?

இந்த மனிதரின் நடத்தையில் ஒழுக்கமில்லை. இவருடைய நடத்தை, இவரை மிருக உலகிற்குக் கொண்டு செல்கிறது. உடலை விட்டு உயிர் பிரிந்த பின், இவர் மிருக உலகில் பிறப்பார்," என அந்த மனிதரின் அடுத்த உலகக் கதியைத் தாம் முன்னதாகவே அறிவாராம்.

அது போலவே, அந்த மனிதர் இறந்த பின், மிருகமாகப் பிறப்பதையும், மிருக உலகில் அவர் துன்பப் படுவதையும் தாம் தம் தேவ பார்வையால் பார்க்க முடியும் என்கிறார்.)

இவ்வுலக வாழ்வு முடிவுற்று, உடலிலிருந்து உயிர் பிரிந்த பின், ஏன் மீண்டும் மிருகமாகப் பிறக்கிறார்கள்? எக்காரணத்தினால், சிலருக்கு மீண்டும் மிருக உலகில் பிறப்பு அமைகிறது. அதன் காரணத்தைப் பகவான் புத்தர் விளக்கியுள்ளார்.

**"தர்ம உபதேசங்களையும், அடுத்த உலகையும் பழித்து, அலட்சியப்படுத்தி; தவறான கொள்கைகளைப் பின்பற்றி; எண்ணங்களாலும், சொற்களாலும், செயல்களாலும் தீயொழுக்கங்களை மேற்கொண்டோர், உடலிலிருந்து உயிர் பிரிந்த பின், தீய கருமங்களின் காரணமாக, மிருகமாகப் பிறப்பதை நான் என் தேவ பார்வையால் பார்க்க முடியும்."**

ஏன் சிலர் மீண்டும் மிருகமாகப் பிறக்கிறார்கள் என்னும் காரணத்தை பகவான் புத்தர் மேலே விளக்கி உள்ளார். இங்குச் சிலர்

தர்ம உபதேசங்களை அலட்சியப்படுத்துவார்கள்; அடுத்த உலகை ஏளனம் செய்வார்கள். இவ்வாறானவர்கள் தவறான கொள்கைகளைப் பின்பற்றுபவர்கள்.

பாவம் இல்லை, புண்ணியம் இல்லை என்பார்கள்; அடுத்த உலகம் இல்லை, மரணத்திற்கு அப்பால் வேறு வாழ்வு இல்லை, அடுத்த உலகில் எவரும் தம் செயல்களின் பலனை அனுபவிப்பதில்லை என்பார்கள். மனிதன் பிறப்பது ஒருமுறைதான், மரணத்தோடு வாழ்வு முடிந்துவிட்டது, மரணத்திற்கு அப்பால் வேறு வாழ்வு இல்லை என்பார்கள்.

தர்ம உபதேசங்களையும், அடுத்த உலகையும் இகழும் இவர்கள், தவறான கொள்கைகளைப் பின்பற்றி, இவ்வுலக வாழ்வில் பாவ கருமங்களைச் செய்வார்கள். இவ்வுலக வாழ்வில் பாவ கருமங்களைச் செய்ததன் காரணமாக, உடலை விட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகில் இவர்கள் மிருகமாகப் பிறப்பார்கள் என்பதைப் பகவான் புத்தர் விளக்குகிறார்.

ஆகவே, தவறான கொள்கைகளைப் பின்பற்றி, பாவ கருமங்களைச் செய்து வருவோர், தம்மைத் தாமே எச்சரித்துக் கொள்ள வேண்டும்.

"இப்போது நான் பாவ கருமங்களைச் செய்தேன் என்றால், ஒருவேளை நானும் அடுத்த உலகில், மிருகமாகப் பிறந்து, துன்பப்பட வேண்டுமே!

இவ்வாறு தம்மைத் தாமே எச்சரித்து, தீயொழுக்கங்களைக் கைவிட்டு, நன்னெறி ஒழுக்கங்களை மேற்கொண்டு வர வேண்டும்.

## 4.2.(i) காகம் நெருப்பில் விழுந்து இறந்த கதை.

ஒரு சமயம், பகவான் புத்தரின் சிஷ்யர்கள் சிலர், அவரைக் காண வந்தனர். வழியில் ஒரு கிராமத்தை அடைந்தனர். கிராம மக்கள் அவர்களை மகிழ்வுடன் வரவேற்று உபசரித்தனர்.

அச்சமயம் அக்கிராமத்து வீடு ஒன்றில், ஒரு பெண் சமைத்துக் கொண்டிருந்தாள். அடுப்பில் எரிந்து கொண்டிருந்த நெருப்பில் இருந்து, ஒரு தீப்பொரி பறந்து சென்று, அங்கிருந்த கூரையில் தீப் பற்றிக் கொண்டது. தீப் பற்றிய கூரை கொழுந்துவிட்டு எரிந்தது. எரியும் கூரையிலிருந்து, ஒரு கட்டு வைக்கோல் விடுபட்டு, ஒரு நெருப்புப் பந்துபோல், மேல் நோக்கிப் பறந்து சென்றது.

அச்சமயம் ஆகாயத்தில் பறந்து வந்த ஒரு காகம், கூரையிலிருந்து விடுபட்டுப் பறந்து வந்த நெருப்புப் பந்தத்தில் சிக்குண்டு, எரிந்து கிராமத்தின் மையத்தில் விழுந்து இறந்தது.

இவை யாவற்றையும் பார்த்த சிஷ்யர்கள், "இந்தக் காகத்தின் மரணம் எவ்வளவு பயங்கரமானது. இது என்ன பாவம் செய்திருந்தால், இதற்கு இப்படியொரு முடிவு ஏற்பட்டிருக்கும்! எனச் சிந்திக்கலாயினர். “இவை யாவற்றையும் பகவான் புத்தர் அறிவார். அவரிடம் கேட்போம்," என்று தங்களுக்கிடையே உரையாடிக் கொண்டு பகவான் புத்தரிடம் சென்றனர். பிறகு பகவான் புத்தரிடம் தாங்கள் கண்டவற்றை விளக்கி, அக்காகத்திற்கு அத்தகையதொரு பயங்கரமான மரணம் ஏற்படுவதற்கான காரணத்தை விளக்கும்படி கேட்டுக் கொண்டனர்.

பகவான் புத்தரும் காகத்தின் மரணத்திற்கான காரணத்தை விளக்கினார்:

முன்பு ஒரு காலத்தில், ஒரு கிராமத்தில் ஒரு விவசாயி வாழ்ந்து வந்தான். இவனிடம் ஒரு சோம்பேறி எருது இருந்தது. விவசாயி அதற்கு ஏதேனும் வேலை கொடுத்தால், அது அந்த வேலையைச் செய்யாமல் அடம் பிடித்துப் படுத்துக் கொள்ளும். அடித்தால் , சிறிது தூரம் சென்று

மீண்டும் படுத்துக் கொள்ளும்.

ஒரு நாள், விவசாயி அதற்கு வேலை கொடுத்த போது, எப்போதும்போல் படுத்துக்கொண்டு அடம் பிடித்தது. விவசாயி அடித்த போது சிறிது தூரம் நடந்து சென்று, மீண்டும் படுத்துக் கொண்டது. சினம் கொண்ட விவசாயி அந்தச் சோம்பேறி எருதின் மேல் வைக்கோலைச் சுற்றிக் கட்டி, அதில் தீயை வைத்தான். எருது நெருப்பில் வெந்து, கருகி இறந்துவிட்டது.

இப்பிறப்பில் அந்த விவசாயி காகமாகப் பிறந்து, தான் முற்பிறப்பில் செய்த பாவ கருமத்தின் காரணமாக நெருப்பில் வெந்து இறந்தான்.

இவ்வாறு பகவான் புத்தர், அந்தக் காகத்திற்கு ஏற்பட்ட பயங்கர மரணத்துக்கான காரணத்தை விளக்கினார்.

## 4.3 நரகப் பிறப்பு

அடுத்த உலகத் தண்டனையில் மற்றொன்று, நரகலோகப் பிறப்பு. அதாவது, இவ்வுலக வாழ்வில் பாவ கருமங்களைச் செய்தோர், பாவக் கருமங்களைச் செய்ததன் காரணமாக, உடலை விட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகில் நரகத்தில் பிறந்து துன்பப் படுவதாகும்.

நரக லோகத்தை நாம் காண முடியாது. நரக லோகத் துன்பங்களையும் நாம் காண முடியாது. நரகத்தின் வேதனையைப் பகவான் புத்தர் இவ்வாறு விபரித்துள்ளார்:

ஒரு முறை சிஷ்யர் ஒருவர் பகாவான் புத்தரிடம் இவ்வாறு கேட்டார்: "பகவான், நரக வேதனையை உவமானத்தால் விளக்க இயலுமா?

"முடியும்" எனக் கூறிய பகவான் புத்தர், இவ்வாறு விளக்கினார்:

"பாவம் செய்த ஒரு திருடனைக் காவலாளிகள் பிடித்து, மன்னனின் முன் கொண்டு சென்று நிறுத்தி, " மன்னரே, இவன் ஒரு திருடன்; பாவம் செய்தவன்; இவனுக்குத் தண்டனை வழங்குங்கள்" எனக் கூறுவதாகக் கொள்வோம்.

மன்னர் அவர்களிடம், " இவனைக் கொண்டு போய் நூறு முறை ஈட்டியால் குத்துங்கள்" எனக் கூறுவதாகக் கொள்வோம்.

(இங்கு நூறு முறை ஈட்டியால் குத்தி, உடலில் காயத்தை உண்டு பண்ணி, அவனுக்குப் பெரும் வேதனையைத் தந்த போதிலும், திருடன் இறக்காதவாறு குத்துவதாகும்.)

காவலாளிகள் திருடனைக் காலையில் நூறு தடவை ஈட்டியால் குத்துவார்கள்.

நண்பகலில் மன்னர் காவலர்களிடம் திருடனின் நிலை என்ன என்று கேட்பார்.

"இன்னும் உயிரோடு இருக்கிறான் " என்று காவலர்கள் கூறுவார்கள்.

"நண்பகலில் அவனை நூறு தடவை மீண்டும் ஈட்டியால் குத்துங்கள் " என மன்னர் கூறுவார்.

காவலர்களும் திருடனை நண்பகலில் நூறு தடவை ஈட்டியால் குத்துவார்கள்.

மாலையில் மன்னர் காவலர்களிடம் "திருடனின் நிலை என்ன" என்பது பற்றிக் கேட்பார்.

காவலர்களும் “திருடன் இன்னும் உயிரோடுதான் இருக்கிறான்" எனப் பதிலிறுப்பார்கள்.

“மாலையில் திருடனை நூறு தடவை ஈட்டியால் குத்துங்கள்" என மன்னர் மீண்டும் கூறுவார்.

காவலர்களும் திருடனை மாலையில் நூறு தடவை ஈட்டியால் குத்துவார்கள்.

பிறகு பகவான் புத்தர் தம் சிஷ்யர்களிடம் இவ்வாறு கேட்டார்:

"இது சம்பந்தமாக என்ன நினைக்கிறீர்கள்? முன்னூறு தடவை ஈட்டியால் குத்தப்பட்ட அந்த மனிதன், பெரும் வேதனையையும், துன்பத்தையும் அனுபவிப்பானா இல்லையா?

"பகவான், ஒரு தடவை ஈட்டியால் குத்தினாலே, அந்த மனிதன் பெரும் வேதனையையும், துன்பத்தையும் அனுபவிப்பான். முன்னூறு தடவை குத்தினால், இன்னும் மிகப்பெரிய வேதனையைத் தரும், என்று சிஷ்யர்கள் கூறினார்கள்.

பிறகு பகவான் புத்தர் ஒரு சிறு கல்லை தம் கையில் எடுத்து, சிஷ்யர்களிடம் கேட்டார்.

"எது பெரியது, என் கையிலுள்ள கல்லா அல்லது இமய மலையா?"

"பகவான், தங்கள் கையிலுள்ள கல், இமய மலையோடு ஒப்பிடும்போது, மிகவும் அற்பமானது; மிக மிகச் சிறியது. ஒப்பிட இயலாத அளவிற்கு இமய மலை பெரியது.

அதுபோல் தான், முன்னூறு தடவை ஈட்டியால் குத்திய போது அந்த மனிதன் அனுபவித்த வேதனை நரகலோக வேதனையோடு ஒப்பிடுதல். முன்னூறு தடவை ஈட்டியால் குத்தியபோது, அந்த மனிதன் அனுபவித்த வேதனை, நரகத்தின் வேதனையோடு ஒப்பிட்டால் மிகவும் அற்பமானதே! ஒப்பிட முடியாத அளவிற்குத் துன்பமானது நரக வேதனை, என பகவான் புத்தர் நரக வேதனையைப் பற்றி உவமானத்தின் மூலம் விளக்கினார்.

நரகத்தை நாம் காண முடியாது. நரகத்தின் துன்பங்களையும் நாம் காண முடியாது. உடலைவிட்டு உயிர் பிரிந்த பின், ஒரு மனிதன் மீண்டும் நரகத்தில் பிறப்பதையும், நாம் காண முடியாது. அதைக் காணும் ஆற்றல் நம் கண்களுக்கு இல்லை.

ஆனால், மரணத்திற்கு அப்பால் மனிதர்களின் நிலை என்ன என்பதைத் தாம் அறிவார் என்றும்; சாதாரண மனிதர்களுக்கு இல்லாத பூரண ஞான அறிவும், தேவ பார்வையும் தமக்கு உண்டு என்றும்; இவ்வுலக வாழ்வில் பாவ கருமங்களைச் செய்தோர், பாவ கருமங்களைச் செய்ததன் காரணமாக, உடலைவிட்டு உயிர் பிரிந்த பின், மீண்டும் நரகத்தில் பிறந்து துன்பப் படுவதையும், தாம் தம் தேவ பார்வையால் காண முடியும் என்றும் பகவான் புத்தர் இவ்வுலகிற்கு அறிவித்துள்ளார்.

***"நரகத்தை நான் அறிவேன். அங்கு செல்லும் வழியையும் நான் அறிவேன்; எவ்வகையான நடத்தை, அதன் காரணமாக, உடலை விட்டு உயிர் பிரிந்த பின், ஒருவருக்கு மீண்டும் நரகத்தில் பிறப்பு அமையும் என்பதையும் நான் அறிவேன்."***

சில மனிதர்களைப் பார்க்கும்போதே, அவர்கள் அடுத்த உலகில் நரகத்தில்தான் பிறப்பார்கள் என்பது தமக்கு முன்னதாகவே தெரியும் என்கிறார்.

***"மனிதர்களின் மனத்தை நான் அறிவேன். மனிதர்களின் நடத்தையை நான் அறிவேன். சில மனிதர்களைக் காணும்போது, "இந்த மனிதரின் நடத்தை, இவரை நரகத்திற்குக் கொண்டு செல்லும்; இவர் நரகத்திற்குப் போகும் பாதையில் செல்கிறார்; இவர் நரகத்தை நோக்கிப் போகிறார். இறந்து, உடலைவிட்டு உயிர் பிரிந்த பின், இந்த மனிதர், நரகத்தில் பிறப்பார்" என நான் அறிவேன்.***

***அது போலவே, சில காலம் கழித்து, அந்த மனிதர் இறப்பதையும்; இறந்து, உடலிலிருந்து உயிர் பிரிந்து, நரகத்தில் பிறப்பதையும்; நரகத்தில் வேதனைப் படுவதையும் நான் என் தேவ பார்வையால் பார்க்க முடியும்."***

(பகவான் புத்தர் என்ன சொல்கிறார் என்றால், எல்லா மனிதர்களின் மனத்தையும் தாம் அறிவாராம். அதாவது, ஒழுக்கமுடையோரைக் காணும்போது, " இவர் ஒழுக்கமுடையவர், " என அறிவாராம். ஒழுக்கமில்லாதோரைக் காணும்போது, இவர் நடத்தையில் ஒழுக்கமில்லை என அறிவாராம். அனைவருடைய நடத்தையையும், ஒழுக்கத்தையும் அவர் அறிவாராகையால், சில மனிதர்களைப் பார்த்ததும் அவருக்குத் தெரியுமாம்; என்னவென்று தெரியுமாம்?

"இந்த மனிதரின் நடத்தையில் ஒழுக்கமில்லை. இவருடைய நடத்தை , இவரை நரகத்திற்குக் கொண்டு செல்கிறது. உடலை விட்டு உயிர் பிரிந்த பின் இவர் நரகத்தில் எழுவார்," என அந்த மனிதரின் அடுத்த உலகக் கதியை தாம் முன்னதாகவே அறிவாராம்.

அது போலவே, அந்த மனிதர் இறந்த பின், நரகத்தில் பிறப்பதையும், நரகத்தில் துன்பப் படுவதையும், தாம் தம் தேவ பார்வையால் பார்க்க முடியும் என்கிறார்.)

இவ்வுலக வாழ்க்கை முடிவுற்று, உடலிலிருந்து உயிர் பிரிந்த பின், சிலர் ஏன் நரகத்தில் பிறக்கிறார்கள்? எக்காரணத்தினால் சிலருக்கு மீண்டும் நரகத்தில் பிறப்பு அமைகிறது? காரணத்தைப் பகவான் புத்தர் விளக்கி உள்ளார்:

***“தர்ம உபதேசங்களையும், அடுத்த உலகையும் பழித்து, அலட்சியப்படுத்தி; தவறான கொள்கைகளைப் பின்பற்றி; எண்ணங்களைலும், சொற்களைலும், செயல்களாலும் தீயொழுக்கங்களை மேற்கொண்டோர், உடலை விட்டு உயிர் பிரிந்த பின், தீய கருமங்களைச் செய்ததன் காரணமாக, நரகத்தில் பிறப்பதை நான் என் தேவ பார்வையால் பார்க்க முடியும்”***

ஏன் சிலர் நரகத்திற்குள் வாழ்கிறார்கள் என்னும் காரணத்தை பகவான் புத்தர் மேலே விளக்கி உள்ளார்.

இங்குச் சிலர் தர்ம உபதேசங்களை அலட்சியப் படுத்துவார்கள்; அடுத்த உலகை ஏளனம் செய்வார்கள். இவர்கள் தவறான கொள்கைகளைப் பின்பற்றுபவர்கள்.

பாவம் இல்லை, புண்ணியம் இல்லை என்பார்கள்; அடுத்த உலகம் இல்லை, மரணத்திற்கு அப்பால் வேறு வாழ்வு இல்லை; அடுத்த உலகில் எவரும் தம் செயல்களின் பலனை அனுபவிப்பதில்லை என்பார்கள். மனிதன் பிறப்பது ஒரு முறைதான்; மரணத்தோடு வாழ்வு முடிந்துவிட்டது; மரணத்திற்கு அப்பால் வேறு வாழ்வு இல்லை என்பார்கள்.

தர்ம உபதேசங்களையும், அடுத்த உலகையும் இகழும் இவர்கள், தவறான கொள்கைகளைப் பின்பற்றி, இவ்வுலக வாழ்வில் பாவ கருமங்களைச் செய்வார்கள். இவ்வுலக வாழ்வில் பாவ கருமங்களைச் செய்ததன் காரணமாக, உடலை விட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகில் இவர்கள், நரகத்தில் பிறப்பார்கள் என பகவான் புத்தர் விளக்குகிறார்.

ஆகவே, தவறான கொள்கைகளைப் பின்பற்றி, பாவ கருமங்களைச் செய்வோர், தம்மைத் தாமே எச்சரித்துக் கொள்ள வேண்டும்.

"இப்போது நான் பாவ கருமங்களைச் செய்தேன் என்றால், ஒரு வேளை நானும் அடுத்த உலகில் நரகத்தில் பிறந்து துன்பப் பட வேண்டுமே!"

இவ்வாறு தம்மைத் தாமே எச்சரித்து, தீயொழுக்கங்களைக் கைவிட்டு, நன்னெறி ஒழுக்கங்களை மேற்கொள்ள வேண்டும்.

## 4.3. (i) மாடுகளைக் கொன்ற ஒரு கசாப்புக் காரனின் கதை

பகவான் புத்தர் வாழ்ந்த காலத்தில், சவத்திப் பட்டணத்தில் ஒரு கசாப்புக்காரன் வாழ்ந்து வந்தான். அவன் மாடுகளைக் கொன்று, மாமிசம்

விற்று வந்தான். மாமிசத்தில் சில பாகங்களைத் தேர்ந்தெடுத்து, மனைவியிடம் கொடுத்துச் சமைக்கச் சொல்வான். மீதமுள்ளவற்றை விற்பனை செய்வான். பிறகு மனைவி சமைத்த மாமிசத்தை உண்பான். மாமிசம் இல்லாவிட்டால் அன்று அவன் சோறு உண்ணமாட்டான். மாடுகளைக் கொல்லும் இப்பழக்கத்தை ஐம்பது ஆண்டுகளாகச் செய்து வந்தான்.

அவ்வூருக்கு அருகில் உள்ள ஒரு மடத்தில் பகவான் புத்தர் தர்ம உபதேசம் செய்து வந்த போதிலும், கடந்த ஐம்பது ஆண்டு காலத்தில், இவன் ஒரு தடவையாவது அங்கு சென்று தர்ம உபதேசத்தைக் கேட்டதில்லை. பகவான் புத்தருக்கும், அவருடைய சிஷ்யர்களுக்கும், இவன் ஒரு கரண்டி கஞ்சி கூடத் தர்மமாக வழங்கியதில்லை. சவத்திப் பட்டணத்தில் உள்ள மக்கள், திரளாகச் சென்று பகவானின் தர்ம உபதேசங்களைக் கேட்டு வந்த போதிலும், இவன் பகவான் புத்தரையும், அவர் அருளும் தர்ம உபதேசங்களையும் பழித்துப் பேசி வந்தான்.

ஒரு நாள் கசாப்புக்காரன் ஒரு மாட்டைக் கொன்று, மாமிசத்தின் சில பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, மனைவியிடம் கொடுத்துச் சமைக்கச் சொல்லிவிட்டு, மீதமுள்ளவற்றை விற்பனை செய்தான். பின் குளத்திற்குக் குளிக்கச் சென்றான்.

அவன் குளிக்கச் சென்ற சமயம், அவனுடைய நண்பர் ஒருவர் வீட்டிற்கு வந்து, கசாப்புக்காரனின் மனைவியிடம் "விற்பனைக்கு மாமிசம் இருந்தால் கொஞ்சம் கொடுங்கள். வீட்டிற்கு விருந்தினர் வந்துள்ளனர்," எனக் கேட்டார்.

"விற்பனைக்கு மாமிசம் இல்லை. உங்கள் நண்பர் எல்லாவற்றையும் விற்றுவிட்டார்" எனக் கசாப்புக்காரனின் மனைவி கூறினாள்.

"என் வேண்டுகோளை மறுக்க வேண்டாம். வீட்டில் மாமிசம் ஏதும் இருந்தால் கொடுங்கள்" என வந்தவர் மீண்டும் கேட்டார்.

"தங்கள் நண்பர் தனக்காக வைத்துள்ள மாமிசத்தைத் தவிர வீட்டில் வேறு மாமிசம் இல்லை. மாமிசம் இல்லாமல் அவர் சோறு

உண்ணமாட்டார்" என கசாப்புக்காரனின் மனைவி கூறினாள்.

ஆனால், மனைவி மறுத்த போதிலும், வந்த நண்பர் வற்புறுத்தி மாமிசத்தை வாங்கிச் சென்றார்.

குளத்திற்குக் குளிக்கச் சென்ற கணவர் குளித்துத் திரும்பியதும், மனைவி சோற்றுடன் கீரை காய்கறிகளையும் கணவனுக்கு உணவாகப் பரிமாறினாள்.

"மாமிசம் எங்கே? என அவன் மனைவியிடம் கேட்டபோது, அவள் நடந்தவற்றைக் கணவனிடம் கூறினாள்.

“மாமிசம் இல்லாவிட்டால் நான் உண்ணமாட்டேன். இதை எடுத்துக் கொண்டு போ" என மனைவியிடம் சோற்றை எடுத்து அப்புறப் படுத்தச் சொன்னான். பிறகு ஒரு கத்தியை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வெளியே வந்தான்.

வீட்டிற்கு வெளியில் காளை மாடு ஒன்று ஒரு கம்பத்தில் கட்டப்பட்டிருந்தது. இவன் காளை மாட்டிடம் சென்று, தன் கையை காளை மாட்டின் வாயினுள் நுழைத்து, அதன் நாக்கை வெளியே இழுத்து, கத்தியினால் அதை அடியோடு வெட்டி எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான்.

வீட்டிற்கு வந்த அவன், அந்த நாக்கை, அடுப்பில் எரிந்து கொண்டிருந்த நெருப்பில் சுட்டுச் சமைத்தான். பிறகு மனைவியிடம் சோற்றை எடுத்து வரும்படிக் கூறி, சோற்றின் மேல், சுட்ட காளையின் நாக்கை வைத்து உண்ணத் தொடங்கினான்.

முதலில் ஒரு பிடிச் சோற்றை வாயில் வைத்துப் பின் நெருப்பில் சுட்ட நாக்கை எடுத்து, ஒரு துண்டைக் கடித்தான். அக்கணமே இவன் நாக்கு அடியோடு துண்டிக்கப்பட்டு, வாயிலிருந்து சோற்றுத் தட்டில் விழுந்தது. அக்கணமே இவன் செய்த பாவத்திற்கு இவன் தண்டிக்கப் பட்டான்.

வாயிலிருந்து இரத்தம் கொட்ட, இவன் வீட்டின் முற்றத்திற்கு

ஓடி வந்தான். வீட்டின் முற்றத்தில் மண்டியிட்டு, கைகளாலும், கால்களாலும் தவழ்ந்து, நாக்கு அறுபட்டபோது எவ்வாறு காளைமாடு கதறியதோ, அதுபோல், கதறிக் கொண்டு இவன் அங்குமிங்கும் ஓடினான்.

வாயிலிருந்து இரத்தம் கொட்ட, காளைமாடுபோல் கதறிக் கொண்டு, அங்குமிங்கும் தவழ்ந்து ஓடிய இவன், சிறிது நேரம் கழித்து இறந்தான். மீண்டும் நரகத்தில் பிறந்தான். காளை மாடும் இறந்துவிட்டது.

## 4.4 மனிதப் பிறப்பு

### மனிதர்களிடையே ஏன் இத்தனை வித்தியாசங்கள்.

ஏழ்மையான குடும்பங்களில் பிறந்து வறுமையில் வாழ்வோர், செல்வம் மிகுந்த குடும்பங்களில் பிறந்து, சுகபோகமான வாழ்வு வாழ்வோர்; அற்ப ஆயுளில் இறப்போர், நீண்ட ஆயுளுடன் வாழ்வோர்; பல வியாதிகளால் பீடிக்கப்பட்டோர், ஆரோக்கியமானோர்; அழகுடையோர், அழகற்றோர்; நன்னெறி ஒழுக்கங்களை நாடி நல்வழி நடப்போர், தீயொழுக்கங்களை நாடி தீய வழியில் நடப்போர்; தாழ்ந்த குடும்பங்களில் பிறப்போர், உயர்ந்த குடும்பங்களில் பிறப்போர்; புத்திசாலிகள், மந்த புத்திக்காரர்கள்; செவிடர்கள், குருடர்கள், ஊமைகள், அங்கவீனர்கள் என மனிதர்களில் எத்தனை வித்தியாசங்கள்.

ஏன் மனிதர்களிடையே இவ்வகையான வித்தியாசங்கள். இவற்றிற்கான காரணங்கள்தான் என்ன?

மனிதர்மளிடையே காணப்படும் இவ்வகையான வித்தியாசங்களைக் கண்டு குழப்பமடைந்த சுபா என்னும் இளைஞர், பகவான் புத்தரிடம் விளக்கம் கேட்டார்.

பகவான்! எதனால், என்ன காரணத்தினால் மனிதர்களிடையே இவ்வகையான வித்தியாசங்கள் தோன்றுகின்றன; குறுகிய ஆயுளுடையோரும், நீண்ட ஆயுளுடையோரும்; நோயினால் பீடிக்கப்பட்டோரும், நோயற்றோரும் ; அழகுடையோரும், அழகற்றோரும் ; மிகுந்த செல்வாக்குடையோரும், செல்வாக்கு அற்றோரும்; ஏழைகளும், செல்வந்தர்களும்; தாழ்ந்த குடும்பங்களில் பிறந்தோர், உயர்ந்த குடும்பங்களில் பிறந்தோர்; மந்த புத்திக்காரர்கள், புத்திசாலிகள்; என மக்களிடையே ஏன் இவ்வகையான வித்தியாசங்கள் தோன்றுகின்றன?

பகவான் புத்தர் அவருக்கு இவ்வாறு பதில் கூறினார்:

"உயிர்கள் தங்கள் செயலின் பலனைப் பெறுகின்றன; அவர்களின் செயல்களுக்கு அவர்களே வாரிசு; செயல்களே அவர்களின் கரு; செயல்களே அவர்களின் உறவினர்; செயல்களே அவர்களின் நிலையை நிர்ணயிக்கும்."

"இங்கு ஒரு பெண்ணோ, அல்லது ஆணோ; உள்ளத்தில் கருணையில்லாமல், கொலை செய்வதை நோக்கமாகக் கொண்டு, கையில் ஆயுதம் ஏந்தி, உயிர்களின் உடலிலிருந்து இரத்தம் சிந்தி, உடலினின்றும் உயிரைப் போக்கினால்; அவர் இங்கு இறந்து மீண்டும் மனிதப் பிறப்பு அமையும்போது, அவருடைய ஆயுள் குறுகியதாய் இருக்கும்.

இங்கு ஒரு பெண்ணோ, அல்லது ஆணோ, அவர் உயிர்களைக் கொல்லக் கருதாமல், உயிர்களின் உடலிலிருந்து இரத்தம் சிந்தி உயிரைப் போக்காமல், உயிர்களிடம் அன்பும், கருணையும் கொண்டவரானால், அவர் இங்கு இறந்து மீண்டும் மனிதப்பிறப்பு அமையும் போது, அவருடைய ஆயுள் நீண்டதாயிருக்கும்.

இங்கு ஒரு பெண்ணோ, அல்லது ஆணோ; அவர் வழக்கமாக

உயிர்களுக்கு வேதனையைக் கொடுத்து வந்தாரென்றால், வழக்கமாக உயிர்களுக்குத் துன்பம் செய்தாரென்றால்; கையினாலோ, தடியினாலோ, அல்லது மற்ற ஆயுதத்தாலோ அவர் மற்ற உயிர்களுக்கு வேதனையும், துன்பமும் செய்தாரென்றால்; அவர் இங்கு இறந்து மீண்டும் மனிதப் பிறப்பு அமையும் போது, அவர் பல வியாதிகளால் துன்புறுவார்.

இங்கு ஒரு பெண்ணோ  அல்லது ஆணோ; அவர் மேற்கூறியவாறு உயிர்களுக்கு, வேதனையும், துன்பமும் செய்யவில்லை என்றால், அவர் இங்கு இறந்து மீண்டும் மனிதப் பிறப்பு அமையும்போது, அவருக்குச் சிற்சில வியாதிகள் மட்டும்தான் ஏற்படும்.

இங்கு ஒரு பெண்ணோ, அல்லது ஆணோ; அவர் கோபக்காரர், சிடுசிடுப்புக்காரர், எப்பொழுதும் கோபக் குறியுடன் இருப்பார்; அற்ப விஷயங்களுக்கெல்லாம் கோபித்துக் கொள்வார். வெறுப்பைக் காட்டுவார். விரோதமும், பகைமையும் கொள்வார்; நிதானம் அற்றவர் பொறுமை இல்லாதவர்; அவர் இங்கு இறந்து மீண்டும் மனிதப்பிறப்பு அடையும்போது, அவர் அழகிய தோற்றத்துடன் இருக்கமாட்டார்.

இங்கு ஒரு பெண்ணோ, அல்லது ஆணோ; அவர் கோபம் கொள்வதில்லை, சிடு சிடுப்பதில்லை, கோபக்குறியுடன் இருப்பதில்லை; பெரிய பிரச்சினையாயிருந்தாலும், உணர்ச்சி வசப்பட்டுக் கோபம் கொள்வதில்லை, வெறுப்பு அடைவதில்லை, குரோதமும், பகையும் கொள்வதில்லை; நிதானமானவர், பொறுமை காப்பவர்; அவர் இங்கு இறந்து மீண்டும் மனிதப் பிறப்பு அமையும் போது, அழகிய தோற்றத்துடன் இருப்பார்.

இங்கு ஒரு பெண்ணோ, அல்லது ஆணோ; அவர் பொறாமைக் குணம் கொண்டவர்; பிறருக்கு ஏற்படும் நன்மைகளைக் கண்டு பொறாமை கொள்பவர்; பிறருக்குக் கிடைக்கும் மதிப்பையும், மரியாதையையும் கண்டு பொறாமை கொள்பவர்; பிறருடைய செல்வாக்கைக் கண்டு பொறாமை கொள்பவர்; அவர் இங்கு இறந்து மீண்டும் மனிதப்பிறப்பு அமையும்போது, அவருக்கு மதிப்பும், செல்வாக்கும் இருக்காது.

இங்கு ஒரு பெண்ணோ, அல்லது ஆணோ; அவர் மனத்தில் பொறாமை இல்லாதவர்; பிறர் அடையும் நன்மைகளைக் கண்டு

பொறாமை கொள்ளாதவர்; பிறர் அடையும் புகழையும், மதிப்பையும் கண்டு பொறாமை கொள்ளாதவர்; பிறருடைய செல்வாக்கைக் கண்டு பொறாமை கொள்ளாதவர்; அவர் இங்கு இறந்து மீண்டும் மனிதப் பிறப்பு அமையும்போது, அவருக்கு பெருமதிப்பும் செல்வாக்கும் இருக்கும்.

இங்கு ஒரு பெண்ணோ, அல்லது ஆணோ; அவர் தான தர்மங்கள் செய்யாதவர்; தயாள குணம் இல்லாதவர்; தாராள மனமில்லாதவர்; பிறருக்குக் கொடுத்து உதவாதவர்; அவர் இங்கு இறந்து மீண்டும் மனிதப் பிறப்பு அமையும் போது, அவர் ஏழ்மை நிலையை எய்துவார்.

இங்கு ஒரு பெண்ணோ, அல்லது ஆணோ; அவர் தான தர்மங்கள் செய்பவர்; தயாள குணம் உடையவர்; தாராள மனமுடையவர்; பிறருக்குக் கொடுத்து உதவுபவர்; அவர் இங்கு இறந்து மீண்டும் மனிதப் பிறப்பு அமையும்போது, அவர் செல்வம் நிறைந்தவராக இருப்பார்.

இங்கு ஒரு பெண்ணோ, அல்லது ஆணோ; கர்வம் கொண்டவர்; வணக்கமும் மரியாதையும் இல்லாதவர்; மூத்தோரிடம் அன்பும் மரியாதையும் இல்லாதவர்; மரியாதைக்குரியோரை மதிக்காதவர்; வணக்கத்துக் குரியோரை வணங்காதவர்; அவர் இங்கு இறந்து மீண்டும் மனிதப் பிறப்பு அமையும்போது, அவர் தாழ்ந்த குடும்பத்தில் பிறப்பார்.

இங்கு ஒரு பெண்ணோ, அல்லது ஆணோ; அவர் கர்வம் இல்லாதவர்; அகந்தை இல்லாதவர்; மரியாதை உள்ளவர்; மூத்தோரிடம் அன்பும் மரியாதையும் உள்ளவர்; மரியாதைக்குரியோருக்கு மரியாதை செய்பவர்; வணக்கத்துக்குரியோரை வணங்கி மதிப்பவர்; அவர் இங்கு இறந்து மீண்டும் மனிதப் பிறப்பு அமையும்போது அவர் உயர்ந்த குடும்பத்தில் பிறப்பார்.

இங்கு ஒரு பெண்ணோ, அல்லது ஆணோ; அவர் கல்வி அறிவும் நன்னெறி ஒழுக்கமும் உடையோரை நாடி, நல்லது எது, தீயது எது எனக் கேட்டுத் தெளிவதில்லை; நன்மை எது, தீமை எது எனக் கேட்டுத் தெளிவதில்லை; நன்மை பயக்கக் கூடியவை எவை, தீமை பயக்கக்கூடியவை எவை எனக் கேட்டறிவதில்லை; நாட வேண்டியவை எவை, நாடக்கூடாதவை எவை எனக் கேட்டறிவதில்லை; செய்யத்

தக்கவை எவை, செய்யக்கூடாதவை எவை எனக் கேட்டறிவதில்லை; அறிய வேண்டியவற்றை அறிந்துகொள்ள முயற்சி செய்வதில்லை. அவர் இங்கு இறந்து, மீண்டும் மனிதப் பிறப்பு அமையும்போது, மந்த புத்திக்காரராக இருப்பார்.

இங்கு ஒரு பெண்ணோ, அல்லது ஆணோ; அவர் கல்வி அறிவும் நன்னெறி ஒழுக்கமும் உடையோரை நாடி, நல்லது எது, கெட்டது எது எனக் கேட்டறிவார்; நன்மை எது, தீமை எது எனக் கேட்டறிவார்; நன்மை பயக்கக்கூடியவை எவை, தீமை விளைவிக்கக்கூடியவை எவை எனக் கேட்டறிவார்; நாட வேண்டியவை எவை, நாடக்கூடாதவை எவை எனக் கேட்டறிவார்; செயத்தக்க செயல்கள் எவை, செய்யத்தகாத செயல்கள் எவை எனக் கேட்டறிவார்; அறிய வேண்டியவற்றை அறிய முயற்சி செய்வார். அவர் இங்கு இறந்து, மீண்டும் மனிதப் பிறப்பு அமையும்போது, அவர் மிகவும் புத்திசாலியாக இருப்பார்.

மனிதர்களிடையே தோன்றும் வித்தியாசங்களுக்கு, அவர்களின் செயல்களே காரணம் எனப் பகவான் புத்தர், சுபா என்னும் இளைஞருக்கு விளக்கம் கூறினார்.

கர்மங்களின் பலனை சிந்தனையால் அறிய முடியாது என்கிறார் பகவான் புத்தர். அதாவது நாம் செய்த ஒரு செயல், அதன் பலனை எப்போது, எந்தப் பிறப்பில், எந்தச் சூழ் நிலையில், எப்படி அனுபவிக்க வேண்டும் என்பதை, சிந்தனையால் சிந்தித்து அறிந்து கொள்ளமுடியாது. அது வீண் முயற்சி என்றும், அதனால் மனக்குழப்பம் தான் ஏற்படும் என்றும் பகவான் புத்தர் கூறியிருக்கின்றார்.

மனிதர்களுக்கு இல்லாத பூரண ஞான அறிவு தமக்கு உண்டென்றும், தம் பூரண ஞான அறிவினால், உயிர்களின் கர்ம வினைப் பலன்களை நேரிடையாக உள்ளது உள்ளபடியே தாம் அறிவார் என்றும் கூறியுள்ளார்.

ஆகவே, கர்ம பலன்களை, நாம் நம் சிந்தனையால், பகுத்தறிவினால் அறிய முடியாது. அவ்வாறான முயற்சி மனக்குழப்பத்தையே ஏற்படுத்தும்.

## 4.4.(1) ஒரு கருமியின் கதை

ஒரு சமயம் சவத்திப் பட்டணத்தில், ஆனந்தன் என்னும் செல்வந்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு கருமி. செல்வம் நிறைய இருந்த போதிலும், அவருக்குக் கொடுக்க மனமில்லை. கொடுத்தால் செல்வம் கைவிட்டுப் போய்விடும் என அஞ்சிய ஆனந்தன், செல்வத்தை இறுகப் பிடித்து, கருமித்தனமாகவும், எவருக்கும் ஈயாத உலோபியாகவும் வாழ்ந்து வந்தார்.

இரு வாரங்களுக்கு ஒருமுறை தம் மகன் முலசீரிக்கு இவ்வாறு அறிவுரை கூறி வந்தார் :

இப்போது நம்மிடமுள்ள செல்வத்தை மிகப் பெரிது என எண்ண வேண்டாம். உன்னிடமுள்ள செல்வத்திலிருந்து, ஒருபோதும் எவருக்கும் எதையும் கொடுக்காதே. செல்வத்தைப் பெருக்க வேண்டும். ஒவ்வொரு காசாகக் கொடுத்தாலும் செல்வம் சிறுகச் சிறுகக் கரைந்துவிடும்."

மகன் செல்வத்தை அழித்துவிடுவானோ என அஞ்சிய இவர், தங்கங்களை ஐந்து குடத்தில், மகனுக்குத் தெரியாமல், இரகசியமாக வீட்டில் புதைத்து வைத்தார். தங்கத்தைப் புதைத்து வைத்த இடத்தை மகனுக்கு அறிவிக்காமலேயே ஒரு நாள் ஆனந்தன் இறந்துவிட்டார்.

ஆனந்தன் தன் மறு பிறப்பில் ஒரு பிச்சைக்காரர் குடும்பத்தில் பிறந்தார். இவர் தாயின் கருப்பையில் கருத்தரித்த நாள் முதல் அவர்களுக்குக் கிடைத்துவந்த பிச்சையும் குறைந்து வரலாயிற்று. மகன் பிறந்தபோது, பார்க்க மிகவும் அவலட்சணமாகவும், விகாரமாகவும் அருவருக்கத் தக்க தோற்றத்தையும் கொண்டிருந்தான்.

கைகளும், கால்களும், கண்களும், காதுகளும், முக்கும் , வாயும் எங்கு இருக்க வேண்டுமோ அங்கு இருக்கவில்லை. குழந்தை பார்க்கப் பயங்கரமாயும், அருவருப்பாயும் தோன்றியது. இருப்பினும் தன் கருப்பையில் தோன்றிய குழந்தையிடம் தாய்க்குப் பெரும் அன்பு உண்டென்பதால், குழந்தையின் தாய் குழந்தையைக் கைவிடவில்லை.

குழந்தையுடன் பிச்சைக்குச் சென்றாளென்றால், அவளுக்கு எதுவும் கிடைக்காது. ஆனால், குழந்தையைக் குடிசையில் விட்டு விட்டுப் பிச்சைக்குச் சென்றால், அன்று அவளுக்கு ஏதேனும் கிடைக்கும்.

பையன் நடக்கும் பருவத்தை அடைந்ததும் அவனுடைய தாய் அவன் கையில் ஓர் உடைந்த தட்டை வைத்து, "மகனே நீ எனக்குப் பெரும் துயரத்தையும், வேதனையையும் கொண்டு வந்தாய். இனியும் உன்னை நான் ஆதரிக்க முடியாது. இந்தப் பட்டணத்தில் அனாதைகளுக்கும், ஏழை எளியோர்களுக்கும் உணவு வழங்கப் படுகிறது. பிச்சை எடுத்து நீ பிழைத்துக் கொள்," எனக் கூறி, அவனை விட்டுச் சென்று விட்டாள்.

வீடு வீடாகச் சென்று பிச்சை எடுத்த அவன், ஒரு நாள், தான் முற்பிறப்பில் வாழ்ந்த வீட்டை அடைந்தான். வீட்டைப் பார்த்ததும், அவனுக்குத் தன்னுடைய முற்பிறப்பு ஞாபகத்திற்கு வந்தது. அப்போது அந்த வீட்டில் அவனுடைய மகன் முலசீரி தன் மனைவி மக்களோடு வாழ்ந்து வந்தான்.

தன்னுடைய முன்னால் பிறப்பு ஞாபகத்திற்கு வந்ததும், தன்னுடைய தற்போதைய நிலையையும் அவலட்சணத்தையும் மறந்து, தன்னுடைய வீடு என எண்ணிக்கொண்டு, வீட்டிற்குள் நுழைந்தான்.

வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த முலசீரியின் பிள்ளைகள், வீட்டிற்குள் நுழைந்த அவனுடைய பயங்கரத் தோற்றத்தைக் கண்டு பயந்து அழுதார்கள். பிள்ளைகளின் அழுகுரலைக் கேட்டு ஓடி வந்த வேளையாட்கள், அவனை, அடித்து இழுத்துச் சென்று, வீட்டிற்கு வெளியே ஒரு குப்பை மேட்டில் வீசினார்கள்.

அச்சமயம், பகவான் புத்தர் தம் சிஷ்யர்களுடன் அவ்வழியே வந்தார். அங்கு நடைபெற்ற சம்பவத்தைக் கண்ட பகவான் புத்தர், தம் சிஷ்யர்களிடம் முலசீரியை அழைத்து வரும்படி கூறினார்.

முலசீரி வந்ததும், "இந்தப் பிச்சைக்காரப் பையன் யாரென்று உனக்குத் தெரியுமா?" என்று பகவான் புத்தர் கேட்டார்.

முலசீரி அப்பையனைத் தனக்குத் தெரியாது எனக் கூறினார்.

"இவன் உன் தந்தை, செல்வந்தர் ஆனந்தன்" எனப் பகவான் புத்தர் கூறினார்.

ஆனால் முலசீரி நம்பவில்லை.

முலசீரி நம்பவில்லை என்பதால், பகவான் புத்தர் அந்தப் பிச்சைக் காரப் பையனிடம், " ஆனந்தா, நீ ஐந்து குடத் தங்கங்களைப் புதைத்து வைத்துள்ள இடத்தை உன் மகனுக்குக் காட்டு" எனக் கூறினார்.

பையனும் , தங்கத்தைப் புதைத்து வைத்துள்ள இடத்தைக் காண்பித்தான். அவ்விடத்தைத் தோண்டிப் பார்த்த போது, அங்கு ஐந்து குடங்களில் தங்கம் இருந்தது.

அதன் பின், முலசீரி பகவான் புத்தரின் தர்ம உபதேசங்களை நம்பும் மனத்துடன் கேட்டு, தான தர்மங்கள் செய்து, பயபக்தியுடன் வாழ்ந்து வந்தார்.

## 5. மிலரப்பாவும் இறக்கும் செம்மறி ஆடும்

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன், திபேத் நாட்டில், மிலரப்பா என்ற யோகி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் பகவான் புத்தரின் தர்ம உபதேசங்களைக் கற்று, பல ஆண்டுகள் மலைகளிலும், குகைகளிலும் தவமிருந்து, ஞான அறிவைப் பெற்றார். இவ்வுலக மக்களின் மீது கருணை கொண்டு, ஊர் ஊராகச் சென்று, பல ஆண்டுகள் திபேத்திய நாட்டு மக்களுக்குத் தர்ம உபதேசம் செய்து வந்தார்.

அவருடைய மிக நெருங்கிய, அன்பிற்குரிய சிஷ்யர் ரெச்சாங் பா என்பவர். ரெச்சாங் பாவின் உள்ளத்தில் இன்னும் உலகப் பற்று உண்டு என்பதை அறிந்த மிலரப்பா, அவருக்கு உபதேசம் செய்வதற்காக, நியாநோன் என்னும் ஊரில் நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு சந்தைக்கு அவரை அழைத்துச் சென்றார்.

சந்தையில் பல கசாப்புக் காரர்கள் கூடியிருந்தார்கள். மிருகங்களைக் கொன்று, வியாபாரத்திற்காக மாமிசங்களைக் குவியல் குவியலாகக் குவித்திருந்தார்கள். அருகில், கொல்லப்பட்ட மிருகங்களின் தலைகளை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி, பெருங்குவியலாகக் குவித்து வைத்திருந்தார்கள். சுற்றிலும் மிருகங்களின் தோல்கள், சிதறிக் கிடந்தன. வெட்டப்பட்ட மிருகங்களின் இரத்தம் தரையில் ஓடி, சிறு சிறு குட்டைகளாகத் தேங்கி இருந்தது. அருகில் வரிசை, வரிசையாக மிருகங்கள் வெட்டுவதற்காகக் கம்பங்களில் கட்டி வைக்கப்பட்டிருந்தன.

ஒருவன் ஒரு கருப்புச் செம்மறி ஆட்டை, வெட்டிக் கொண்டிருந்தான். ஆடு இறப்பதற்கு முன், அதன் வயிற்றைக் கிழித்து, குடலை இழுத்தான். மிலரப்பாவைப் பார்த்ததும் , இறந்து கொண்டிருந்த ஆடு, கசாப்புக்காரனிடமிருந்து தப்பித்து, வேதனையால் முனகிக் கொண்டு, தட்டுத் தடுமாறி மிலரப்பாவின் உதவியை நாடி வந்தது.

அறுபட்ட கழுத்துடன், கிழிக்கப்பட்ட வயிற்றிலிருந்து குடல் தொங்க, வேதனையால் முனகிக் கொண்டு, தட்டுத் தடுமாறித் தன்னிடம் உதவிக்கு வந்த அந்த ஆட்டைப் பார்த்ததும் மிலரப்பா, கண்ணீர் சிந்தினார். உடனே, அதன் ஆவியை விடுவித்து, அதற்கு விமோசனம் தந்தார்.

பிறகு, உள்ளத்தில் கருணை பொங்க, ரெக்சாங் பாவிற்கு உபதேசம் செய்வதற்காகப் பாடினார். அவர் பாடிய பாட்டின் விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

சங்சாராவில் (பிறவிப் பெருங்கடலில்) திசை தெரியாமல், தத்தளிக்கும் உயிர்களின் நிலைதான் எவ்வளவு பரிதாபகரமானது!

பிறப்பினால் ஏற்படும் துன்பங்களிலிருந்து மீள்வதற்கான தர்ம உபதேசம் இவ்வுலகிற்கு வழங்கப் பட்டிருந்த போதிலும், நலம் தரும் நல்லுபதேசங்களை அலட்சியப் படுத்தி, பாவ கருமங்களைச் செய்வோரின் கதியைக் காணும்போது, என் உள்ளம் அவர்களுக்காகப் பரிதாபப் படுகிறது.

நற்கரும பலனால், பெறுவதற்கரிய மானிடப் பிறப்பைப் பெற்றும், உயிர்களைக் கொல்வதில் இன்பம் காணும் இவர்களின் செயல்தான் எவ்வளவு முட்டாள்தனமானது.

இப்போது இவர்கள் செய்யும் இந்தப் பாவச் செயல், பின்னால் இவர்களுக்குத் துன்பம் தருமாதலால், இவர்கள் தமக்குத் தாமே கேடு செய்து கொள்கிறார்கள். தமக்குத் தாமே கேடு செய்து கொள்ளும் இவர்களின் செயல்தா எவ்வளவு முட்டாள்தனமானது!

மிருகங்கள் கொல்லப்படுவதும், இரத்தம் சிந்தி ஓடுவதும், மனிதர்கள் மாமிசத்தை மகிழ்ந்து உண்பதும், இது எவ்வளவு , வேதனை தரும் ஒரு காட்சி.

அறியாமையில் மயங்கி, மனக்குழப்பத்தில் பாவ கருமங்களைச் செய்வோர், எவ்வளவு பரிதாபத்திற்குரியவர்கள்.

அன்பிற்குப் பதில் மனிதர்களின் உள்ளத்தில், அரக்கக் குணம் நிரம்பி உள்ளதைக் காணும்போது, என் உள்ளம் வேதனையடைகிறது.

பாவ கருமங்களைச் செய்வோரின் குருட்டுத் தனத்தைக் காணும்போது, என் உள்ளம் இவர்களுக்காக அனுதாபப்படுகிறது.

தம் எதிர்கால வாழ்வைச் சிறிதும் எண்ணிப் பாராமல், பாவ கருமங்களில் இன்பம் தேடுவோரைக் காணும்போது, பின்னால் இவர்கள் அடையப் போகும் வேதனையை எண்ணி, என் உள்ளம் இவர்களுக்காகப் பரிதாபப் படுகிறது.

ரெக்சாங் பா, இவை யாவும் புனிதமான தர்ம உபதேசங்களை உனக்கு ஞாபகப் படுத்தவில்லையா!

அந்தோ! பாவ கருமங்களில் சிக்குண்டு, இருள் சூழ்ந்த சங்சாராவில் (பிறவிப் பெருங்கடலில்) உயிர்கள் தத்தளிக்கின்றன!

பாவ கருமங்களைச் செய்ததன் காரணமாக, உயிர்களின் மனத்தில், கொடிய எண்ணங்கள் எழுகின்றன.

மனத்தில் எழும் கொடிய எண்ணங்களால் உந்தப்பட்டு, நலம் தரும் நல்லுபதேசங்களை, உயிர்கள் அலட்சியப் படுத்திப் புறக்கணிக்கின்றன!

ஒரு கள்வனைப்போல், மனத்தில் எழும் கொடிய எண்ணங்கள், உயிர்களின் தூய்மையான வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கின்றன.

**விழித்தெழுங்கள்! பாவங்கள் செய்யாதீர்கள்!**

**பிறவிப் பெருங்கடலில் உயிர்களின் அவல நிலையைக் கொஞ்சம் தியானியுங்கள்!**

**இந்த மனித உடல் என்னும் வீடு,**

**மாதந்தோறும், ஆண்டு தோறும், அழிந்து வருகிறது.**

**எந்நேரத்திலும் சரிந்து விழக் கூடிய இது வாழ்வதற்கு அபாயகரமானது!**

**தப்பித்துக் கொள்ளுங்கள்! பாதுகாப்பைத் தேடிக் கொள்ளுங்கள்!**

**புனித தர்ம உபதேசங்களை வாழ்வில் கடைப்பிடியுங்கள்!**

பாவ கருமங்களைச் செய்வோர் தமக்கும் மரணம்
வரும் என்பதைச் சிந்திப்பதில்லை.

நிலையற்ற இந்த மனித உடல் அழிவதற்கு முன்,
உடலை விட்டு உயிர் பிரிவதற்கு முன்,
பாதுகாப்பைத் தேடிக்கொள்ளுங்கள்.

புனித தர்ம உபதேசங்களை வாழ்வில்
கடைப்பிடியுங்கள்!

# <u>மற்ற வெளியீடுகள்</u>

1. அறவழி
2. தீவினையச்சம்
3. நல்வினைப்பயன்
4. கோபத்தினால் விளையும் தீமைகள்
5. இல்லற வாழ்க்கை
6. ஒழுக்கமுடைமை
7. உன் செயல்களுக்கு நீயே வாரிசு
8. மரணம்
9. அறிவுடைமை
10. இளமையில் சிந்திக்க வேண்டியவை
11. விரதம்
12. தண்டனை
13. கோபத்தை வெல்லும் வழி
14. ஓர் இளைஞனுக்கு பகவான் புத்தர் கூறிய அறிவுரை
15. மறுபிறப்பும் துன்பப் பிறப்புகளைக் கடக்கும் மார்க்கமும்
16. பொய்யான பக்தி
17. தாயும் தந்தையும்
18. மனசாட்சி இல்லாதவர்கள்
19. கருணை
20. அநாத பிண்டகர்
21. சேமவதி
22. பாவிகள்
23. நல்வாழ்வு
24. நான்கு மனைவிகள்
25. குற்றம் உணர்ந்து திருந்துதல்
26. அன்புடைமை
27. நன்றி மறந்தவர்கள்
28. அன்புடையோரும் அன்பில்லாதோரும்
29. ஒதுக்கப்பட்டவர்கள்
30. நேர்மை
31. பேராசை
32. நன்றியுடைமை
33. அடக்கமுடைமை
34. நல்லது செய்தால் நல்லது விளையும்
35. மன்னிப்பு
36. குற்றம்